
ISBN : 978-81-685205-5-4

செந்தமிழறிஞர்கள்:108



திரு வி கலியாணசுந்தரனார்

பகுப்பும் தொகுப்பும்
முனைவர் சு இராமலிங்கம்



NSR 100 Educational Trust
[An ISO 9001 - 2015 Certified]
AD-13,5th Street, Anna Nagar West, Chennai - 600 040
www.nasubbureddiar100.in

https://www.annacentenarylibrary.org/pages/view/54.%20%E0%AE%A4%E0%AE%BF%E0%AE%B0%E0%AF%81.%E0%AE%B5%E0%AE%BF.%E0%AE%95%E0%AE%B2%E0%AE%BF%E0%AE%AF%E0%AE%BE%E0%AE%A3%E0%AE%9A%E0%AF%81%E0%AE%A8%E0%AF%8D%E0%AE%A4%E0%AE%B0%E0%AE%A9%E0%AE%BE%E0%AE%B0%E0%AF%8D_1883

செந்தமிழ்சிற்பிகள்

திரு.வி.கலியாணசுந்தரனார் (1883-1953)



அறிமுகம்

திருவாரூர் விருத்தாசலம் கலியாணசுந்தரனார் அல்லது திரு. வி. க., (Thiru. V. Kalyanasundaram, ஆகத்து 26, 1883 - செப்டம்பர் 17, 1953[1]) அரசியல், சமுதாயம், சமயம் எனப் பல துறைகளிலும் ஈடுபாடுகொண்டு பல நூல்களை எழுதிய தமிழறிஞர். சிறந்த மேடைப் பேச்சாளர். இவரது தமிழ்நடையின் காரணமாக இவர் தமிழ்த்தென்றல் என்ற சிறப்புப் பெயரால் அழைக்கப்படுகிறார்.

காஞ்சிபுரம் மாவட்டத்தில் துள்ளம்(தண்டலம்) என்னும் சிற்றூரில் விருத்தாசல முதலியார் - சின்னம்மா தம்பதிகளுக்கு ஆறாவது மகனாகப் பிறந்தார். கலியாணசுந்தரனாரின் தந்தை இலக்கியப் பயிற்சியும் இசைப் பயிற்சியும் உடையவர். ஆசிரியத் தொழிலுடன் வணிகமும் புரிந்தவர். ஆசிரியராகத் திருவாரூரில் பணி செய்த போது கலியாணசுந்தரமும்

அங்கேயே வளர்ந்தார். இவர் பச்சையம்மாள் என்பவரை மணந்து மூன்று ஆண்களையும் ஒரு பெண் குழந்தையையும் பெற்றார். இவ்வம்மையார் இறந்த பின்னர் சின்னம்மாள் என்பாரை மணந்து நான்கு ஆண் மக்களையும் நான்கு பெண் மக்களையும் பெற்றார். இவர்களுள் ஒருவரே கல்யாணசுந்தரனார்.

கல்வி

தொடக்கத்தில் தம் தந்தையிடம் கல்வி பயின்றார். பின்னர் சென்னையில் இராயப்பேட்டையில் தங்கி ஆரியன் தொடக்கப் பள்ளியில் சேர்ந்தார். அதன் பின்னர்,1894இல் வெஸ்லி பள்ளியில் நான்காம் வகுப்பில் சேர்ந்தார். அங்கு அவருக்கு ஒரு காலும் ஒரு கையும் முடங்கின. இதனால் பள்ளிப் படிப்பு சிறிது காலம் தடைப்பட்டது. படிப்பில் நல்ல திறமையுடையவராக விளங்கினார்.

1904ஆம் ஆண்டில் ஆறாம் படிவத் தேர்வு எழுத முடியாமல் போனது. அத்தோடு அவரது பள்ளிப் படிப்பும் முடிந்தது.

தமிழ்க் கல்வி

வெஸ்லி பள்ளியில் ஆசிரியராக இருந்த யாழ்ப்பாணம் நா. கதிரவேற்பிள்ளை என்ற தமிழறிஞரிடம் நட்பு ஏற்பட்டது. அவரிடம் தமிழ் பயிலத் தொடங்கினார். அவரிடம் தமிழ் நூல்களை முறையாகப் பயின்று சிறந்த புலமை பெற்றார். கதிரவேற்பிள்ளை நீலகிரிக்குச் சென்ற பொழுது அங்கு காலமானார். அதன் பின்னர் கல்யாணசுந்தரனார் மயிலை தணிகாசல முதலியாரிடம் தமிழ், மற்றும் சைவ நூல்களையும் பாடம் கேட்டார்.

ஆசிரியப் பணி

1906ஆம் ஆண்டில் ஸ்பென்சர் தொழிலகம் என்ற ஆங்கில நிறுவனத்தில் கணக்கர் ஆகச் சேர்ந்தார். அக்காலத்தில், பால கங்காதர திலகர் போன்றோரின் விடுதலைக் கிளர்ச்சிகளில் ஈடுபாடு கொண்டதனால் அவ்வேலையிலிருந்தும் அவர் நீங்கினார். பின்னர் 1909இல் ஆயிரம் விளக்கு பகுதியில் உள்ள வெஸ்லியன் பள்ளியில் ஆசிரியராகச் சேர்ந்து ஆறு ஆண்டுகள் பணி புரிந்தார். அப்போது கமலாம்பிகை என்ற நங்கையை 1912இல் திருமணம் செய்துகொண்டார். அவருக்கு இரண்டு பிள்ளைகளும் பிறந்தனர். 1918 ஆம் ஆண்டிற்குள் தம் மனைவி, பிள்ளைகளை இழந்து மீண்டும் தனியரானார். இராயப்பேட்டை வெஸ்லி கல்லூரியில் தலைமை ஆசிரியராகச் சேர்ந்தார். நாட்டிற்கு உழைப்பதற்காக அவர் அப்பணியில் இருந்து விலகினார்.

பத்திரிகைப் பணி

பின்னர் தேசபக்தன் என்ற பத்திரிகையில் இரண்டரை ஆண்டுகள் அதன் ஆசிரியராகப் பணி புரிந்தார். அதன் பின்னர் திராவிடன், நவசக்தி போன்

ற பத்திரிகைகளில் ஆசிரியராக இருந்து நாட்டு விடுதலைக்குத் தொண்டாற்றினார்.

அரசியல் பணி

தொழிற்சங்கத்தைத் தோற்றுவித்துத் தொழிலாளர்களின் உரிமைக்கும் முன்னேற்றத்திற்கும் பாடுபட்டார். சிறந்த மேடைப் பேச்சாளரான இவர் அரசியல், சமுதாயம், சமயம் எனப் பல துறைகளிலும் ஈடுபாடுகொண்டு பல நூல்களை எழுதினார்.

எழுதிய நூல்கள்

வாழ்க்கை வரலாறுகள்

யாழ்ப்பாணம் தந்த சிவஞானதீபம், நா.கதிரைவேற்பிள்ளை சரித்திரம் - 1908
மனித வாழ்க்கையும் காந்தியடிகளும் - 1921
பெண்ணின் பெருமை அல்லது வாழ்க்கைத்துணை - 1927
நாயன்மார் வரலாறு - 1937
முடியா? காதலா? சீர்திருத்தமா? - 1938
உள்ளொளி - 1942
திரு.வி.க வாழ்க்கைக் குறிப்புகள் 1 - 1944
திரு.வி.க வாழ்க்கைக் குறிப்புகள் 2 - 1944

உரை நூல்கள்

பெரிய புராணம் குறிப்புரையும் வசனமும் - 1907
பட்டினத்துப்பிள்ளையார் திருப்பாடற்றிரட்டும் பத்திரகிரியார் புலம்பலும் விருத்தியுரையும் - 1923
காரைக்கால் அம்மையார் திருமுறை - குறிப்புரை - 1941
திருக்குறள் - விரிவுரை (பாயிரம்) - 1939
திருக்குறள் - விரிவுரை (இல்லறவியல்) 1941

அரசியல் நூல்கள்

தேசபக்தாமிர்தம் - 1919
என் கடன் பணி செய்து கிடப்பதே - 1921
தமிழ்நாட்டுச் செல்வம் - 1924
தமிழ்த்தென்றல் (அல்லது) தலைமைப்பொழிவு - 1928
சீர்திருத்தம் (அல்லது) இளமை விருந்து -1930.
(இதன் ஒரு பகுதியை ஒலிப்பு வடிவில் இங்கு காணொலி)
தமிழ்ச்சோலை கட்டுரைத் திரட்டு 1 - 1935
தமிழ்ச்சோலை கட்டுரைத் திரட்டு 2 - 1935
இந்தியாவும் விடுதலையும் - 1940
தமிழ்க்கலை - 1953
சமய நூல்கள்
சைவசமய சாரம் - 1921

நாயன்மார் திறம் - 1922
தமிழ்நாடும் நம்மாழ்வாரும் - 1923
சைவத்தின் சமசரசம் - 1925
முருகன் அல்லது அழகு - 1925
கடவுட் காட்சியும் தாயுமானவரும் - 1928
இராமலிங்க சுவாமிகள் திருவுள்ளம் - 1929
தமிழ் நூல்களில் பெளத்தம் - 1929
சைவத் திறவு - 1929
நினைப்பவர் மனம் - 1930
இமயமலை (அல்லது) தியானம் - 1931
சமரச சன்மார்க்க போதமும் திறவும் - 1933
சமரச தீபம் - 1934
சித்தமார்க்கம் - 1935
ஆலமும் அமுதமும் - 1944
பரம்பொருள் (அல்லது) வாழ்க்கை வழி - 1949

பாடல்கள்

முருகன் அருள் வேட்டல் - 1932
திருமால் அருள் வேட்டல் - 1938
பொதுமை வேட்டல் - 1942
கிறிஸ்துவின் அருள் வேட்டல் - 1945
புதுமை வேட்டல் - 1945
சிவனருள் வேட்டல் - 1947
கிறிஸ்து மொழிக்குறள் - 1948
இருளில் ஒளி - 1950
இருமையும் ஒருமையும் - 1950
அருகன் அருகே (அல்லது) விடுதலை வழி - 1951
பொருளும் அருளும் (அல்லது) மார்க்ஸியமும் காந்தியமும் - 1951
சித்தந் திருத்தல் (அல்லது) செத்துப் பிறத்தல் - 1951
முதுமை உளறல் - 1951
வளர்ச்சியும் வாழ்வும் (அல்லது) படுக்கைப் பிதற்றல் - 1953
இன்பவாழ்வு - 1925
பயண இலக்கிய நூல்கள்
இலங்கைச் செலவு (இலங்கைப் பயணம் குறித்த தொகுப்பு நூல்)
பொதுவுடைமை தொடர்பான கட்டுரைகள்
தொழிலாளர் லட்சியங்களைப் பற்றி
ஓர் இந்திய ஒர்க் ஷாப்பிலிருந்து
கர்னாடிக் மில் வேலைநிறுத்தம்
தொழிலாளர் நிலையும் சென்னை சர்க்காரும்

இந்திய தொழிலாளரின் சர்வதேச நோக்கு
ஆம்ஸ்டர்டாம் சர்வதேச ஸ்தாபனமும், மாஸ்கோ
சர்வதேச ஸ்தாபனமும்
பெரம்பூர் பட்டாளத்தில் போலீஸ் அட்டூழியம்
வேலைநிறுத்த உரிமை - கில்பர்ட் ஸ்லேடருக்குப் பதில்
மில் வட்டாரத்துக் கலகங்கள்.

(😊)(😊) @@@@@@@@@@ (😊)(😊)

தமிழ் இணையக் கல்விக்கழகம்
TAMIL VIRTUAL ACADEMY

திரு.வி.க.வின் வாழ்க்கையும் கல்வியும்

https://www.tamilvu.org/ta/courses-degree-p102-p1021-html-p1021661-24771

தமிழ் இளைஞர் முதல் முதியோர் வரையுள்ள யாவர் நெஞ்சங்களிலும் வாழும் பெரியவர் இவர். இவரை அன்போடு **திரு.வி.க.** என அழைப்பர். இவர் தமிழ்நாட்டுக்கும், தமிழ்மொழிக்கும் எண்ணிலடங்காத் தொண்டுகள் செய்துள்ளார். இவர் செங்கற்பட்டு மாவட்டம் துள்ளம் என்னும் ஊரில் 1883ஆம் ஆண்டு பிறந்தவர். இவருடைய பெற்றோர் விருத்தாசல முதலியார், சின்னம்மாள். எனினும் இவர்தம் முன்னோர் திருவாரூரைச் சேர்ந்தவராதலின் 'திரு' என்ற அடைமொழியைத் தம் பெயருக்கு முன்னால் அமைத்துக் கொண்டார். முதலில் தந்தையிடமே திண்ணைப் பள்ளியிலும், பிறகு வெஸ்லி கலாசாலையிலும் பயின்றார்.

இவருடைய தமிழாசான் யாழ்ப்பாணம் கதிரைவேற்பிள்ளை. தனியே தம் ஆசானிடம் புராணங்களையும், யாப்பிலக்கணத்தையும்; மயிலை மகாவித்வான் தணிகாசல முதலியாரிடம் **திருவருட்பயன், சிவப்பிரகாசம், சிவஞானபோதம்** போன்ற நூல்களையும் வடமொழியையும் கற்றார். பாம்பன் சுவாமிகளிடம் உபநிடதங்களும், மருவூர்க் கணேச சாஸ்திரிகளிடம் சிவகீதையும், நீலகண்ட பாடியமும், அப்துல் கரீமிடம் திருக்குர்ஆனும் கற்றார். ஜஸ்டிஸ் சர்.டி.சதாசிவராவ் தொடர்பால் ஆங்கில அறிவும் பெற்றார். சான்றோர் பேசுமிடம் எங்கணும் சென்று கேள்விச் செல்வத்தைப் பெருக்கியும், பல்திற நூல்களை விடாது பயின்று அறிவை விசாலப்படுத்தியும் வந்தார். அந்நாளைப் பெருமக்கள் பெசன்ட் அம்மையார், மறைமலையடிகள் போன்றோர் தொடர்பும் இவரை உயர்த்தியது. இவ்விதமாகப் பெற்ற ஊற்றமே இவரை ஏற்றம் பெறச் செய்தது. வெஸ்லி கலாசாலையிலும், பள்ளியிலும் தமிழாசிரியராகத் திகழ்ந்தார்.

1917-இல் பெசன்டையும் அவரது இரு கண்களான அருண்டேல், வாடியாவையும் கைது செய்தது அரசு. உடனே அரசியலில் ஈடுபட்டு, **தேசபக்தன்** இதழாசிரியராகி, வேகமிக்க தமிழ் எழுத்தால்

மக்களைச் சிந்திக்கவும் சீறி எழவும் தூண்டினார். அடக்குமுறையை எதிர்த்து கோகலே மண்டபத்தில் திவான் பகதூர் கேசவப் பிள்ளை தலைமையில் **திராவிடரும் காங்கிரசும்** என்ற தலைப்பில் பேசினார். இதுவே இவரது அரசியல் கன்னிப் பேச்சு.

சென்னையில் மகாசன சங்கம் தோன்றியது. அதன் தஞ்சை மாநாட்டில் 'இனி எங்கும் எவரும் தமிழிலேயே பேசவேண்டும்' என்ற தீர்மானத்தைக் கொணர்ந்தார். இந்த மொழிப் புரட்சி காரணமாக அவரைப் **புரட்சி வீரர்** எனப் புகழ்ந்தனர். அம்மாநாடு ஈரோட்டில் கூடியபோது பெரியார் ஈ.வே.ரா தொடர்பு ஏற்பட்டது. சாது அச்சுக்கூடம் நிறுவி **நவசக்தி** வார இதழை 20-10-1920-இல் தொடங்கினார். தேசபக்திக் கனலை மூட்டினார். தமிழார்வத்தைப் பொங்கச் செய்தார். 1940வரை 20 ஆண்டுகள் அப்பத்திரிகையை நடத்தினார். இந்தியாவிலேயே முதன்முதல் 1918-இல் சென்னையில்தான் தொழிற்சங்கம் ஏற்பட்டது. அதில் சுந்தரனாரின் பங்கு பெரிது. போலீஸ் சங்கம், அச்சகத் தொழிலாளர் சங்கம், இரயில்வே தொழிலாளர் சங்கம் தோன்றக் காரணமானார். அரசியலிலும் தொழிலாளரியக்கத்திலும் இவரது பெரும் பகுதி வாழ்க்கை கழிந்தது. 9-7-1926-இல் அரசியலைத் துறந்தார். இவரது அரசியல் குரு திலகர்.

சமயத் தொண்டின் நிலையமாக நிலவுவது இவர் தோற்றிய **பாலசுப்பிரமணிய பக்த ஜனசபை. மாதர் சங்கம், கைம்மைப் பெண்கள் கழகம், கணிகையர் நலம் கருதும் நாகபாசத்தார் சங்கம்** முதலியவை தோன்றச் செய்தார். இளமை மணம் ஒழிக்க வந்த சாரதா மசோதாவுக்கு எழுத்தாலும் பேச்சாலும் ஊக்கம் தந்தார். இவர் பணிகட்கெல்லாம் மகுடமாக அமைவது தமிழ்ப்பணி.

திரு.வி.க.வின் படைப்புகள்

இவர் நடத்திய இரண்டு இதழ்கள் **தேசபக்தன், நவசக்தி** ஆகியன. இயற்றிய நூல்கள் **மனித வாழ்க்கையும் காந்தியடிகளும், பெண்ணின் பெருமை அல்லது வாழ்க்கைத் துணை, சீர்திருத்தம் அல்லது இளமை விருந்து, முருகன் அல்லது அழகு, சைவத் திறவு, தமிழ்த்தென்றல்** (சொற்பொழிவுகள்), **தமிழ்ச் சோலை** (பத்திரிகைத் தலையங்கங்கள்), **மேடைத் தமிழ்** (மேடைப் பேச்சுகள்), **அருள்வேட்டல்** (செய்யுள் நூல்) ஆகியவை. இவரது உரைநடை சின்னஞ்சிறு தொடர்கள், வினாவிடை, வியங்கோள், வியப்புத் தொடர்கள், அடுக்குத் தொடர்கள், புதுச்சொல்லாக்கம், உவமை, உருவகம் போன்றவற்றைக் கொண்டு தனித்தன்மையும் எளிமையும் கொண்டு விளங்குகிறது. புதிய உரைநடையின் தந்தை என்றும் தமிழ் மேடைப் பேச்சின் தந்தை என்றும் இவர் போற்றப் பெறுகிறார். பொதுமைக் கருத்துகளையும் காலத்துக்கு ஏற்ற புதுமைக் கருத்துகளையும், தமிழ்நாட்டில் தென்றலாய் அள்ளித் தெளித்தார். தமிழாசிரியராய் இருந்து பத்திரிகை ஆசிரியராய்ப் புகழ் பெற்று, அரசியல் தலைவராய் விளங்கி, தொழிலாளர் தலைவராய்ச் சிறப்புற்றுப் படிப்படியாய் வளர்ச்சி கண்டவர்.

திரு.வி.க. ஐம்பது அரிய நூல்களை எழுதியுள்ளார். "பேச்சுப் பெரும்புயலாகவும், எழுத்து எரிமலையாகவும், செய்தித்தாள் சிற்பியாகவும் ஒளிர்ந்தார். அவர் தமிழ்நாட்டுக் காந்தியாகவும், தமிழுக்கும் தமிழ் எழுத்தாளர்களுக்கும் தந்தையாகவும், தொழிலாளர்களுக்குத் தாயாகவும் விளங்கினார்" என்று கல்கி பாராட்டியுள்ளார்.

சாதனையும் போதனையும்

திரு.வி.க. ஒரு சகாப்தம்; பல்கலைக் கழகம், மூன்றெழுத்துச் சான்றோர், ஆன்ற எழுத்தாளர், அருவிப் பேச்சாளர், தேர்ந்த சிந்தனையாளர், பண்பார்ந்த பத்திரிகையாளர், உரையாசிரியர், மொழிபெயர்ப்பாளர், கவிஞர், இறைத்திருப்பணியும் தமிழ்ப் பொறப்பணியும் நாட்டு நற்பணியும் ஆற்றிய நல்லார். தமிழ் முனிவர், தனக்கென வாழாப் பிறர்க்கென முயலும் பேரருள் நெஞ்சம் உடையவர். எல்லார்க்கும் எழுத்துநடை வேறு, பேச்சுநடை வேறு. இந்த இருவேறு நடையையும் ஒன்றாக்கிப் புதியதோர் நடை படைத்தவர். வாழ்வையே பேச்சும் எழுத்துமாக ஆக்கிக் கொண்டவர் இவர். இதனால்தான் படித்த அறிவாளிகளும் ஏடறியாத் தொழிலாளிகளும் இவரால் ஒருசேரக் கவரப்பட்டனர். அடிக்கன்று வாழையாகத் தோன்றிய கல்கியும் மு.வரதராசனாரும் இவருக்கு வாரிசுகளாவர். அதனால்தான் கல்யாண சுந்தரனாரின் முதல் ஈரெழுத்தையும் தன் பெயரின் முதலெழுத்தையும் கல்+கி = கல்கி என வைத்துக் கொண்டார் இரா.கிருஷ்ணமூர்த்தி (கல்கி). தாம் நடத்திய ஏடுகளில் திரு.வி.க. காந்தியடிகளின் ஆங்கிலத்தை அழகும் ஆழமும் குறையாது அப்படியே பெயர்த்துள்ளார். காந்தி இவரைப் 'பெயர்ப்பாளர்' என்றே அழைப்பார். இவரது நூற்றாண்டு விழாவினை1984ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் தமிழ்நாடு அரசு தஞ்சையில் கொண்டாடியது.

தன் வரலாறு

தன் வரலாற்றில் இவரது **'வாழ்க்கைக் குறிப்புகள்'** ஒருமைல் கல். அது புதுவகை இலக்கியத்திற்குப் புத்தொளி தந்தது. பிரயாணம் என்ற சொல்லுக்குச் 'செலவு' எனும் சொல்லைப் பயன்படுத்தி நிலவச் செய்த பெருமையர். திரு.வி.க., **திரு.வி.க. தமிழ்** என்று அழைக்கும் வண்ணம் புதுவகை நடையினைத் தோற்றுவித்தவர். தம் வாழ்க்கை நிகழ்ச்சிகளை, அனுபவங்களை, கலந்து கொண்ட இயக்கங்களை, சந்தித்த மனிதர்களைப் பற்றி 800-க்கு அதிகமான பக்கங்களில் வாழ்க்கைக் குறிப்புக்களாகத் தொகுத்துத் தந்துள்ளார். தோற்றுவாய், சோதிடம், குழந்தைமை, பள்ளிப்படிப்பு, பிள்ளைமை, கல்வி எனப் பதினாறு அத்தியாயங்களில் வாழ்க்கைக் குறிப்புக்களைத் தந்துள்ளார். 'நல்லன கொண்டும், தீயன விலக்கியும் மற்றவர் வாழ்வதற்கு என் வாழ்க்கைக் குறிப்புகள் ஓரளவிலாதல் துணைபுரியும் என்னும் நம்பிக்கை இதை எழுதுமாறு உந்தியது' - இதுதான் திரு.வி.க.வின் நோக்கம்.

கீழ்க்கண்ட இணையதளத்தை அணுகவும்

https://www.tamilvu.org/ta/courses-degree-p102-p1021-html-p10216in-24788

உரைநடை சிறப்புகள்

திரு.வி.கலியாணசுந்தரனார் (திரு.வி.க) வின் உரைநடை, எளிய சொற்கள், ஆழமான கருத்துக்கள், உணர்ச்சிப்பூர்வமான நடை, மற்றும் இலக்கிய நயம் (அணிநயங்கள்) ஆகியவற்றால் ஆனது. 'தமிழ்த்தென்றல்' எனப் போற்றப்படும் இவரின் உரைநடை, பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியிலும் இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் தமிழ் உரைநடை வளர்ச்சிக்கு வழி காட்டியாகவும், சமூக, அரசியல் கருத்துக்களை மக்களிடம் கொண்டு சேர்க்கும் கருவியாகவும் திகழ்ந்தது.

திரு.வி.க. வின் உரைநடை சிறப்புகள்:

- **இலக்கிய நயம்:** இவரின் உரைநடை செய்யுள் வடிவம் போன்று அழகுடனும், சந்த நயத்துடனும் இருக்கும். கவித்துவமான உணர்வுகளை உரைநடையில் கொண்டு வருவது இவரின் தனிச்சிறப்பு.

- **எளிய, ஆழமான கருத்துக்கள்:** கடினமான கருத்துக்களையும் சாமானிய மக்களுக்குப் புரியும் வகையில் எளிய தமிழில் தருவார். ஆழ்ந்த சிந்தனையையும், உண்மையான உணர்ச்சியையும் இவரின் நடையில் காணலாம்.

- **உணர்ச்சிப் பெருக்கு:** வாசிப்பவரின் மனதில் உணர்ச்சிகளைத் தூண்டும் வகையில் இவரின் நடை இருக்கும். குறிப்பாகச் சமூகச் சீர்திருத்தம் மற்றும் அரசியல் கருத்துக்களை வலியுறுத்தும்போது, இவரின் உரைநடை மிகுந்த உணர்ச்சியுடன் இருக்கும்.

- **மூலநூல் அறிவு:** திருக்குறள், தேவாரம் போன்ற இலக்கியங்களை நன்கு அறிந்தவர் என்பதால், இவரின் உரைநடையில் மேற்கோள்கள் அதிகமாக இடம்பெறும். இதனால் இவரது உரைநடைக்குத் தனித்த மதிப்பும், நம்பகத்தன்மையும் உண்டு.

- **சமூகச் சீர்திருத்தச் சிந்தனை:** பெண்ணியம், தொழிலாளர் நலம், தமிழ் மொழி வளர்ச்சி போன்றவற்றைத் தன் உரைநடையின் முக்கிய நோக்கமாகக் கொண்டிருந்தார். பெண்ணின் பெருமை போன்ற நூல்கள் இதற்குச் சான்றாகும்.

- **படைப்புத்திறன்:** புதுமையான உவமைகள், உவமை அணிகள், மற்றும் அடுக்குமொழிகளைப் பயன்படுத்தி உரைநடையை அழகுபடுத்துவார்.

- **சுயவிளக்கம்:** இவரின் உரைநடை பெரும்பாலும் கருத்து விளக்கமாகவும், வாசகருடன் உரையாடுவது போன்றும் அமையும். திரு.வி.க. வாழ்க்கைக் குறிப்புகள் போன்ற நூல்கள் இவரின் சிறந்த உரைநடைப் படைப்புகளாகக் கருதப்படுகின்றன.

இவ்வாறாக, திரு.வி.க.வின் உரைநடை, தமிழை மிகவும் எளிய, உணர்ச்சிமிக்க, மற்றும் சிந்தனைக்கு விருந்தளிக்கும் வகையில் மாற்றியமைத்த பெருமைக்குரியதாகும்.

திரு.வி.க. உரைநடையின் வடிவம்

https://www.tamilvu.org/courses/degree/p102/p1021/html/p1021662.htm

உரைநடையின் பொருளில் புதுமை கண்டவர் திரு.வி.க. அதைப் போலவே, உரைநடையின் வடிவத்திலும் அவர் வளர்ச்சியை ஊட்டினார் என்றால் அது மிகையாகாது. அவர் வழங்கிய நடை, உரைநடையின் ஒட்டு மொத்த வளர்ச்சியில் ஒரு சிறந்த இடத்தைப் பெற்றதாகும். நீண்ட தொடர்களுடன், குறியீடுகள் இன்றி, ஏற்ற இறக்கங்கள் இன்றி உணர்ச்சி வெளிப்பாட்டில் கவனம் செலுத்தாது, நீண்ட பத்திகளுடன் வழங்கியது பத்தொன்பதாம் நூற்றாண்டின் உரைநடை. அதிலிருந்து மாறுபட்டுச் சிறுசிறு தொடர்களையும், பல்வேறு உணர்ச்சிகளையும் முறையாக வெளிப்படுத்தும் குறியீடுகளுடன் துள்ளல் அமைப்பில், உள்ளத்துக் கருத்துகளுக்கேற்பச் சொற்களைப் புகுத்திப் புதியதோர் அழகுநடையை உருவாக்கியவர்களுள் திரு.வி.க. தலைசிறந்தவராவார்.

தமிழ் உரைநடையைப் பாமரரும் கேட்கும் வண்ணம் ஓரளவுக்கு எளிமைப்படுத்தி, எழில் கூட்டி, வீறுகாட்டி, மிடுக்கு ஊட்டி வழங்கியவர் அவரே. பிறருடைய உரைநடை நூல்கள் கற்றறிந்த அறிஞர் மத்தியில் மட்டுமே உலவின எனலாம். அவர் கொண்ட பன்முக உறவு தமிழ் உரைநடையைப் பலரோடும் உறவாடச் செய்தது ; பலரைப் பின்பற்றச் செய்தது. இந்த நூற்றாண்டின் நடைமாற்றத்துக்கு வழி காட்டி, உன்னதப் படைப்புகளை வழங்கிய முதல்வர்களுள் முதல்வர் திரு.வி.க.வே எனலாம்.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் உரைநடை வடிவம்

பத்தொன்பதாம் நூற்றாண்டின் உரைநடை வடிவங்கள் சிலவற்றை நோக்கினால் திரு.வி.க.வின் உரைநடை வடிவ வளர்ச்சியை இனங்காணல் இயலும்.

“உரோமன் கத்தோலிக்கத் திருச்சபை யென்பது பரமகர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாதர் ஸ்தாபித்த சமயத்தின் தூதனாகவும் அஸ்திவாரமாகவும் இருக்கின்றதென்றும் புரோடெஸ்டாண்டும் மதங்கள் மனிதர்களால் உண்டாக்கப்பட்ட அபத்த மார்க்கங்களாயிருக்கின்றன வென்றுங் காண்பிக்கின்ற திஷ்டாந்தங்கள்” (மெய்ஞ்ஞான திருச்சபையின் விளக்கம் - 1841) எனவரும் கிறிஸ்துவ சமயநூல் தொடரிலும், “இச்சீவக சிந்தாமணியை உச்சிமேற் புலவர் கொள் நச்சினார்க்கினியருரையுடன் பல பிரதிரூபங்களைக் கொண்டு நன்றாகப் பரிசோதித்து எழுதுவோரால் நேர்ந்த வழுக்களை மாற்றி, பலருக்கும் பயன்படும் வண்ணம் அச்சிடுவிக்க முயலும்படி சில வருடத்திற்கு முன் ம-ள-ள-ஸ்ரீ இராமசாமி முதலியாரவர்கள் பலமுறை வற்புறுத்திக் கொடுத்தார்கள்” (1887, சீவகசிந்தாமணி முதற்பதிப்பு முகவுரை) என எழுதுகின்ற டாக்டர் உ.வே.சாமிநாத ஐயருடைய மொழியிலும், நாம் சென்ற நூற்றாண்டின் உரைநடையமைப்பைக் காணலாம்.

இவ்வடிவங்களில் நாம் காண்பது என்ன? உணர்வது எது? நீண்ட நீண்ட தொடர்கள், பெரிய பெரிய பத்தியமைப்புகள், உணர்ச்சிகளையும் சொற்சிறப்புகளையும் வெளிப்படுத்தும் குறியீடுகளின்மை ஆகியவற்றையே.

சுதேசமித்திரனில் பாரதி எழுதிய கட்டுரைகளிலும் நாம் செம்மையைக் காண முடியவில்லை. நீண்ட வாக்கியங்களையும், கவிதையில் ஒதுக்கிய வடமொழிச் சொற்களை இதில் அதிகம் பெய்துள்ள மொழியமைப்பையுமே காண்கின்றோம். ஆயின், அவரிடம் பிற்காலத்தில் சிறிய சிறிய தொடர்கள் கொண்ட தூய தமிழ்ச் சொற்கள் இடம்பெற்ற நடை உருவாயிற்று. “சிறிய தானியம் போன்ற மூக்கு, சின்னக் கண்கள், சின்னத் தலை, வெள்ளைக் கழுத்து” எனத் தொடரும் சிட்டுக் குருவியின் வருணனை புதுமை கொண்ட நடையை நினைவூட்டுவதாகும்.

திரு.வி.க. கண்ட உரைநடை வளர்ச்சி

திரு.வி.க.வின் உரைநடையோ எளிமை, இனிமை என்னும் இரண்டு இனிய பண்புகளைத் தாங்கி, சிறு சிறு தொடர்களால் துள்ளல் போட்டு நடை பயில்வதைக் காணலாம்.

“சாமிநாத ஐயர் தமிழிலே பிறந்தார்; தமிழிலே வளர்ந்தார்; தமிழிலே வாழ்ந்தார். அவர் பிறப்புத் தமிழ்; வளர்ப்புத் தமிழ்; வாழ்வுந் தமிழ்; அவர் மனமொழி மெய்களெல்லாம் தமிழே ஆயின. அவர் தமிழாயினர்; தமிழ் அவராயிற்று. அவர் தமிழ்; தமிழ் அவர்” எனத் தொடரும் மொழியிலும் (திரு.வி.க. வாழ்க்கைக் குறிப்புகள் - பக்.100). “மொழிநடையைப் பற்றிய போராட்டத்தையும் என் வாழ்க்கை கண்டது. இப்போராட்டம் பொருளற்ற தென்பது எனது உள்ளக் கிடக்கை. ஒரே மனிதர் வாழ்க்கையிலேயே பலதிற நடைகள் அமைகின்றன. எழுதிப் பழகப் பழக அவருக்கென்று ஒரு நடை இயற்கையாகும். இன்னொருவருக்கு வேறுவித நடை இயற்கையாகும்” எனத் தொடரும் மொழிகளிலும் நாம் இவ்வுண்மையைக் காணலாம்.

திரு.வி.க.வின் இத்துள்ளல் நடையே கவிதைப் பண்புடன் உரைவீச்சாக மலர்ந்தது எனலாம்.

> “1932ஆம் ஆண்டு ! துறையூர் உமாமகேசுவரர் வரவேற்பு ! சுயமரியாதை எழுச்சி ! என் பெயர் தீட்டிய வளைவு தீக்கிரை ! உமாமகேசுவரர் கையில் தீயன் சிக்கல் ! ‘நம்மவன் விடுங்கள்’ என்கிறது என் நா !” - (திரு.வி.க. வாழ்க்கைக் குறிப்புகள், பக்.807)

எனத் தொடர்ந்து வியப்புக் குறிகளையே பயன்படுத்தி, சொற்கட்டில் ஒரு அழுத்தத்தையும் விறுவிறுப்பையும் ஊட்டிப் பெய்துள்ளமையை நோக்கும்போது இதனை உணரலாம்.

இத்துள்ளல் நடையே டாக்டர் சாலை.இளந்திரையன் அவர்கள் படைக்கும் உரைவீச்சிலும் அமைந்திருக்கிறது.

பெண்ணே,
பட்டு உடுத்தினால் பகட்டு -
நகை போட்டால் நளினம் -
பசை தடவினால் பளபளப்பு -
மை தீட்டினால் மலர்ச்சி -
சுண்ணம் பூசினால் சுகந்தம் -
இப்படி இப்படிச் சொல்லி
உன்னை
மரப்பாச்சி ஆக்கி விட்டார்கள் மனிதர்கள்
. .. .
விளம்பரத் தட்டியாகவா நீ இருப்பது?
இதுவா பெண்ணின் பெருமை?

- (சாலை. இளந்திரையன், உரைவீச்சு. பக்-12)

என வரும் உரைவீச்சில், தனித்தொடர்கள், உணர்வு காட்டும் சிறு சிறு தொடர்கள் கொண்ட நடை காணப்படுகின்றதன்றோ?

நடையும் நடைமாற்றமும்

இளமையில் அவரிடம் கால்கொண்ட நடை வேறு. சங்க இலக்கியப் பயிற்சிக்குப் பிறகு அமைந்த கடிய நடைவேறு, பத்திரிகைத் துறையில் நுழைந்த பிறகு அமைந்த இனிய நடைவேறு. இறுதியில் அமைந்த பத்திரிகைக்காக மாற்றப்பட்ட நடையே அவரது உரைநடை வடிவமாயிற்று என்று அவரே தெளிவு செய்தல் காண்கிறோம். அவர் கொண்ட நடை பற்றிய விமர்சனத்தை அவர் கூற்றின் வாயிலாகவே காண்போம்.

“யான் தமிழ்ப் போதகாசிரியனாயிருந்தவன். இப்பொழுது தமிழ்ப் பத்திரிகையாசிரியனானேன். தேசபக்தனுக்கென்று ஒரு தனிநடை கொண்டேன். சிறுசிறு வாக்கியங்கள் அமைக்கலானேன். எளிமையில் கருத்துகள் விளக்கும் முறையைப் பற்றினேன். அந்நடையை நாடோறும் எழுதி எழுதிப் பண்பட்டமையால் அதுவே எனக்கு இயற்கையாகியது. பழைய தொடர் மொழிகளும் கோப்பு மொழிகளும் என்னுள்ளேயே ஒடுங்கின. சமயம் நேர்ந்துழிச் சிலவேளையில் அவை தலைகாட்டும்.”

எவ்வித நடையைக் கைக்கொண்டார் என்பது பற்றி அவர் தரும் ஒரு குறிப்பையும் இங்குக் காணல் தகும்.

"செவ்விய தமிழ்நடை, தமிழ்நாட்டிலுள்ள பல்லோர்க்கு இது போழ்து பயன்படாதென்று கருதித் தேசபக்தனுக்கெனச் சிறப்பாக ஒருவகை உரைநடையைக் கொண்டுள்ளேன். இதுகாலைத் தமிழ்நாட்டு வழக்கிலுள்ள பிற மொழிக்குறியீடுகளையும் இக்கால வழக்குச் சொற்களையும் ஆன்றோராட்சி பெறாத சில முறைகளையும் பண்டைத் தமிழ் மக்கள் கோலிய வரம்பிற்குப் பெரிதும் முரணாதவாறு ஆண்டு வருகின்றேன்" என்ற கூற்றுகளிலேயே அவர்தம் செவ்வியநடை புலனாகிறதன்றோ? உருவாகும் உரைநடைகளின் நடையில் மாற்றம் காண்பது எதனால்? இவ்வினாவுக்குப் பலரும் பல்வேறுவகைக் காரணங்களைக் காட்டியுள்ளனர். திரு.வி.க. அதனை இயற்கை என்னும் ஒரே வகை விதைகளினின்றும் தோன்றும் மரங்கள், உருவ வேறுபாடு கொண்டு வளர்வது போல - மாறுபடுவது என்றும், மொழிநடை அவரவர் இயற்கைக் கேற்ற வண்ணம் அமையும் என்றும் கூறுகின்றார். உள்ளப் பண்போடு பண்பை உருவாக்கிய சூழல், வாழ்ந்த சூழல், கற்ற நூல், பழகிய பழக்கம் இவற்றைப் புலப்படுத்துவது போல அது காணப்பெறும்; ஒவ்வொருவரின் கையெழுத்தும் மாறுதல் போல அதுவும் ஒவ்வொருவரிடமும் மாற்றம் கொள்ளும்" என்கிறார், டாக்டர் மு.வரதராசனார்.

திரு.வி.க. பழகிய துறைகள் பல, பயின்ற துறைகள் பல, நுழைந்த துறைகள் பல, தேடிய துறைகள் பல. எனவே, அவரிடம் பல்வேறுபட்ட துறைமொழியறிவும், கலைமொழியறிவும் தமிழ்மொழியறிவோடு சங்கமமாயின. ஆதலின் அவருடைய நடை இவற்றையெல்லாம் வெளிப்படுத்தும் சிறந்த நடையாகக் காணப்படுகிறது எனலாம்.

(😊)(😊) @@@@@@@@@@@ (😊)(😊)

திரு.வி.க. பற்றிய முக்கியத் தகவல்கள்

திரு.வி.கல்யாணசுந்தர முதலியார் (26 ஆகஸ்ட் 1883 - 17 செப்டம்பர் 1953) ஒரு சிறந்த தமிழறிஞர், இதழாளர், தொழிற்சங்க முன்னோடி மற்றும் அரசியல்வாதி ஆவார். 'தமிழ்த்தென்றல்' என அன்புடன் அழைக்கப்படும் இவர், தூய தமிழில் பேசுவதிலும் எழுதுவதிலும் வல்லவர். அரசியல், சமயம், தொழிலாளர் நலன் எனப் பல துறைகளில் பங்காற்றியவர்.

திரு.வி.க. பற்றிய முக்கியத் தகவல்கள்:

- **பிறப்பு:** 1883 ஆகஸ்ட் 26 அன்று விருத்தாசலம்-சின்னம்மாள் தம்பதிக்கு மகனாகப் பிறந்தார். 'திரு.வி.க' என்பது திருவாரூர் விருத்தாசலம் கலியாணசுந்தரம் என்பதன் சுருக்கமாகும்.
- **பணிகள்:** ஆசிரியர், பத்திரிக்கையாளர் (தேசபக்தன், நவசக்தி), தொழிற்சங்கத் தலைவர் எனப் பன்முகம் கொண்டவர்.
- **சிறப்புப் பெயர்கள்:**

  தமிழ்த்தென்றல், மேடைப் பேச்சின் தந்தை
- **படைப்புகள்:** மனிதவாழ்க்கையும் காந்தியடிகளும், பெண்ணின் பெருமை, தமிழ்ச்சோலை, முருகன் அல்லது அழகு, நாயன்மார் வரலாறு உள்ளிட்ட பல நூல்களை எழுதியுள்ளார்.
- **நினைவு:** தமிழ்நாடு அரசு திரு.வி.க. நினைவாக ஆண்டுதோறும் சிறந்த தமிழ் அறிஞர்களுக்கு திரு. வி. க. விருது வழங்கி கௌரவிக்கிறது.

இவரது எழுத்துக்கள் மற்றும் பேச்சுகள் தமிழ் மறுமலர்ச்சிக்கு வித்திட்டன.

திரு.வி.க. நடத்திய முக்கிய இதழ்கள்

திரு.வி.க (திருவாரூர் விருத்தாசலம் கலியாணசுந்தரனார்) சிறந்த இதழாளர் மற்றும் தமிழறிஞர். அவர் நடத்திய முக்கிய இதழ்கள் தேசபக்தன் (நாளிதழ்), நவசக்தி (மாத இதழ்) மற்றும் திராவிடன் (பத்திரிகை). இவற்றுள், அரசியல் மற்றும் தேசிய கருத்துக்களைப் பரப்ப தேசபக்தன் இதழையும், சமூகச் சீர்திருத்தக் கருத்துக்களுக்காக நவசக்தி இதழையும் அவர் சிறப்பாகப் பயன்படுத்தினார்.

திரு.வி.க. நடத்திய முக்கிய இதழ்கள்:


- தேசபக்தன் **(Desabhaktan):** இது ஒரு நாளிதழ். இதில் அரசியல் மற்றும் தேசிய கருத்துக்களைத் தீவிரமாக எழுதி வந்தார்.
- நவசக்தி **(Navasakti):** இது ஒரு மாத இதழ். இதில் சமூகச் சீர்திருத்தம், இலக்கியம் மற்றும் சமயக் கருத்துக்களை வலியுறுத்தினார்.
- திராவிடன் **(Dravidan):** இத்திராவிடன் இதழிலும் அவர் பணியாற்றியுள்ளார்.

இவரது இதழ்கள் தமிழ் சமூக விழிப்புணர்விற்கும், இந்திய விடுதலைப் போராட்டத்திற்கும் பெரும் பங்களிப்பை வழங்கின.

திரு.வி.க வாழ்க்கைக் குறிப்புகள்

ஆசிரியர்: திரு.வி.கல்யாணசுந்தரனார்

https://marinabooks.com/detailed/%E0%AE%A4%E0%AE%BF%E0%AE%B0%E0%AF%81.%E0%AE%B5%E0%AE%BF.%E0%AE%95+%E0%AE%B5%E0%AE%BE%E0%AE%B4%E0%AF%8D%E0%AE%95%E0%AF%8D%E0%AE%95%E0%AF%88%E0%AE%95%E0%AF%8D+%E0%AE%95%E0%AF%81%E0%AE%B1%E0%AE%BF%E0%AE%AA%E0%AF%8D%E0%AE%AA%E0%AF%81%E0%AE%95%E0%AE%B3%E0%AF%8D?id=1626-4442-4521-7104



திரு. வி. கலியாணசுந்தரனார் ஓர் எளிய குடும்பத்தில் பிறந்து வளர்ந்து எளிய வாழ்வே வாழ்ந்தவர். பிறப்பும் வாழ்வும் எளிமையாக இருந்தபோதிலும், அவர்தம் எழுத்திலும் சொல்லிலும் செயலிலும் பெருமை பல் விளங்கின. அவர் இணையற்ற எழுத்தாளர்: கேட்டார்ப் பிணிக்கும் பேச்சாளர் அறநெறி பிறழாச் செயலாளர், இதழ் ஆசிரியராகவும் நூலாசிரியராகவும் விளங்கி அவர் தமிழ் மொழிக்குச் சிறந்த எழுத்துப்பணி புரிந்துள்ளார்; அவருடைய எழுத்துக்கள் இளைஞரின் உள்ளங்களைக் கவர்ந்து, அவர்களின் வாழ்க்கைத் துலக்கியது. அவர்தம் தமிழ்நடை பீடும் பெருமிதமும் வாய்ந்தது. பேச்சுத் துறையிலும் அவர் ஆற்றிய தொண்டு அளப்பரிது. அவர் சென்று பேசாத ஊர் இல்லை; ஏறாத மேடை இல்லை எனலாம். சமயம், இலக்கியம், அரசியல், சமுதாயச் சீர்திருத்தம் முதலான எல்லாத் துறையும் அவர்தம் பேச்சுத் தொண்டால் பயன் பெற்றன.

திரு.வி.க. இயற்றிய நூல்கள்

செய்யுள் நூல்கள்

உரிமை வேட்கை, முருகன் அருள் வேட்டல், திருமால் அருள் வேட்டல், சிவன் அருள் வேட்டல், கிறித்துவின் அருள் வேட்டல், கிறிஸ்து மொழிக்குறள், புதுமை வேட்டல், பொதுமை வேட்டல், அருகன் அருகே அல்லது விடுதலை வழி, பொருளும் அருளும் அல்லது மார்க்ஸியமும் காந்தியமும், இருளில்ஒளி, இருமையும் ஒருமையும், முதுமை உளறல், வளர்ச்சியும் வாழ்வும் அல்லது படுக்கைப் பிதற்றல், இன்பவாழ்வு

கட்டுரை நூல்கள்

– இந்தியாவும் விடுதலையும், மனித வாழ்க்கையும் காந்தியடிகளும், முருகன் அல்லது அழகு, பெண்ணின் பெருமை அல்லது வாழ்க்கைத் துணைநலம், சீர்திருத்தம் அல்லது இளமை விருந்து. சைவத்திறவு, சைவத்தின் சமரசம், கடவுட்காட்சியும் தாயுமானவரும், இராமலிங்க சுவாமிகள் திருவுள்ளம், தமிழ் நூல்களில் பௌத்தம், தமிழ்நாடும் நம்மாழ்வாரும், நாயன்மார்கள்.

உரைகள்


– பெரிய புராணக் குறிப்புரை, திருக்குறள் முதல் 10 அதிகார உரை.

பயண நூல்

– எனது இலங்கைச் செலவு, பயணம் என்பதற்குச் செலவு என்ற சொல்லைப் பயன்படுத்தியவர்; முதல் முதலாக வழக்கிறகுக் கொண்டு வந்தவர்.

– திரு.வி.க.வின் சொற்பொழிவுகளின் தொகுப்பு நூல் – தமிழ்ச் தென்றல்
திரு.வி.க.வின். பத்திரிகைத் தலையங்க தொகுப்புநூல் – தமிழ்ச் சோலை
திரு.வி.க.வின். மேடைச் சொற்பெழிவுகளின் தொகுப்பு நூல் – மேடைத் தமிழ்
திரு.வி.க.வின். சமயச் சொற்பொழிவுகளின் தொகுப்பு நூல் – அருள்வேட்டல்
– திரு.வி.க.வின் இலக்கிய வாரிசுகள் மு. வரதராதசனார். கல்கி கிருஷ்ணமூர்த்தி

தமிழ்த்தென்றல் திரு.வி.க.வின் கவிதை நூல்கள்



திரு. வி. கலியாணசுந்தரனார் ஓர் எளிய குடும்பத்தில் பிறந்து வளர்ந்து எளிய வாழனே வாழ்ந்தவர். பிறப்பும் வாழ்வும் எளிமையான இருந்தபோதிலும், அவர்தம் எழுத்திலும் சொல் லிலும் செயலிலும் பெருமை பல விளங்கின. அவர் இணையற்ற எழுத்தாளர்; கேட்டார்ப் பிணிக்கும் பேச்சாளர்; அறநெறி பிறழாச் செய லொ ளர். இதழ் ஆசிரியராகவும் நூலாசிரியராக வவும் விளங்கி அவர் தமிழ் மொழிக்குச் சிறந்த எழுத்துப்பணி புரிந்துள்ளார்; அவருடைய எழுத்துக்கள் இளைஞரின் உள்ளங்களைக் கவர்ந்து, அவர்களின் வாழ்க்கையைத் துல்க் கியது. அவர் தம் தமிழ்நடை பீடும் பெருமித மும் வாய்ந்தது. பேச்சுத் துறையிலும் அவர் ஆற்றிய தொண்டு அளப்பரியது. அவர் சென்று பேசாத வளர் இல்லை; ஏறாத மேடை இல்லை எனலாம் சமயம், இலக்கியம், அரசியல், சமுதாயச் சீர்திருத்தம் முதலான எல்லாத் துறையும் அவர்தம் பேச்சுத் தொண்டால் பயன் பெற்றன.

தீந்தமிழ்த் தென்றல் திரு.வி.க.

https://keetru.com/index.php/2018-01-12-05-57-50/2014-03-08-04-39-26/2014-03-14-11-17-85/25249-2013-10-22-06-42-26

பி.தயாளன்

பிரிவு: தமிழ்நாடு

வெளியிடப்பட்டது: 22 அக்டோபர் 2013

'பெண்ணின் பெருமையைத் தொழிலாளி உரிமையைக்
கண்ணான தமிழின் கவினார்ந்த உண்மையைப்
புண்ணான இந்தி புகுந்தும் சிறுமையை
எண்ணிய எண்ணத்தில் எழுந்த தமிழனைத்தும்
தேனருவி திரு.வி.க."

- புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்.

இலக்கியத்தமிழை வளப்படுத்திய எழுத்தாளர்! இயந்தமிழுக்கு உயிரூட்டிய சொற்பொழிவாளர்! தேசிய உணர்வோடு தொண்டாற்றிய அரசியல் தலைவர்! உழைக்கும் மக்களுக்கு வழி காட்டிய தொழிற்சங்கத் தலைவர்! பெண்ணுரிமை பேணிய பெருந்தகையாளர்! எளிமையாக வாழ்ந்த அகல் விளக்கு! எதிர்கால இளைஞர்களுக்கான ஒளி விளக்கு! மொத்தத்தில் நாட்டின் நலத்திற்காகவே நலிந்து மெலிந்த நல்லவர்! தமிழுக்காகவே வாழ்ந்த தனித் தமிழ் வல்லவர்! அவர் தான், தீந்தமிழ்த் தென்றல் திரு.வி.க.!!.

திரு.வி.கவின் முன்னோர்கள் வாழ்ந்த ஊர் திருவாரூர். அவருடைய பெயரின் தலைப்பெழுத்துக்களாய் அமைந்துள்ள 'திரு' - என்பதே திருவாரூரைக் குறிப்பதாகும். பாட்டனார் வேங்கடாசல முதலியார் காலத்திலேயே அவரது குடும்பத்தினர் திருவாரூரை விட்டுச் சென்னைக்கு குடியேறி விட்டனர்.

திரு.வி.க.வின் தந்தையார் விருத்தாசல முதலியார் சென்னை இராயப்பேட்டையில் அரிசி வணிகம் செய்து வந்தார். பின்னர்

சென்னைக்கு அருகில் உள்ள துள்ளம் என்ற கிராமத்தில் தொழில் வணிகத்தைத் தொடர்ந்தார்.

துள்ளம் கிராமத்தில் வாழ்ந்தபோதுதான், விருத்தாசல முதலியார் - சின்னம்மாள் தம்பதியனருக்கு இரண்டாவது மகனாக 26.08.1883-ல் திரு.வி.கலியாணசுந்தரனார் பிறந்தார்.

அக்கிராமத்தில் படிக்க வசதி கிடையாது. ஆகவே, தந்தையே ஆசிரியரானார். வீட்டிலேயே திண்ணைப் பள்ளிக்கூடம் ஒன்றைத் தொடங்கினார். அங்கு மகனுக்கு எழுத்தறிவூட்டினார்! ஆத்திச்சூடி, கொன்றை வேந்தன் உலக நீதி பேன்ற எளிய அற நூல்களை அரிச்சுவடியாய்க் கற்பித்தார். பின்னர். பிள்ளைகளின் படிப்புக்காக குடும்பம் மீண்டும் சென்னை வந்தது.

திரு.வி.க., ஆரியன் பிரைமரி பாடசாலையில் சேர்ந்து படிக்கலானார். நான்காம் வகுப்பில் உடல் நலப் பாதிப்பால் கல்வி தடைப்பட்டது. பின்னர் வெஸ்லி கல்வி நிலையத்தில் நான்காம் வகுப்பில் சேர்ந்து பள்ளியிறுதி வகுப்பு வரை படித்தார். அப்பொழுது, தனது உள்ளம் கவர்ந்த கதிரைவேற்பிள்ளை சார்பாக நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல நேர்ந்தது. அதனால், பள்ளியிறுதி வகுப்புக்கான தெரிவுத் தேர்வை எழுத இயலவில்லை ஆகையால், பத்தாம் வகுப்பு, பாதியோடு முடிந்து விட்டது. பள்ளிப் படிப்புக்கு முற்றுப்புள்ளி விழுந்துவிட்டது. ஆனாலும் என்ன? தொடர்ந்து கதிரைவேற்பிள்ளை, மயிலை மகாவித்துவான் தணிகாசல முதலியார் ஆகியோரிடம் தமிழ் பயின்றார்.

அன்னிபெசன்ட் அம்மையாரிடம் கொண்ட ஈடுபாட்டால் பிரம்மஞான தத்துவத்தில் தெளிவு பெற்றார். சச்சிதானந்தம் பிள்ளையுடன் நிகழ்த்திய தத்துவ விசாரணைகள் மூலம் மேலை நாட்டுத் தத்துவங்களையும் தெரிந்து கொண்டார். சிந்தனைச் சிற்பி சிங்காரவேலரின் சொற்பொழிவுகள் கேட்டு விஞ்ஞானக் கருத்துக்களின் மீது மிகுந்த ஈடுபாடும் ஈர்ப்பும் ஏற்படலானார்.

சென்னையில் சுதந்திரப் போரட்டத் தலைவர் விபின் சுந்திர பாலர் ஆற்றிய சொற்பொழிவைக் கேட்டு விடுதலை உணர்வு ததும்பிடலானார், அரவிந்த கோஷ் நடத்திய 'வந்தே மாதரம்" இதழை விடாது படித்து திரு.வி..க தேச விடுதலைப் போராட்டத்தில் தீக்கொழுந்தாய்ச் சுடர்விட்டுத் திகழ்ந்தார்!

'இரவுலட்' சட்டத்தை எதிர்த்து நாடெங்கும் போராட்டம் நடைபெற்றது. அக்கொடிய அடக்குமுறைச் சட்டத்தை எதிர்க்கும்படி

காந்தியடிகள் அறைகூவல் விடுத்திருந்தார். இந்தியா முழுவதும் பயணம் செய்து பிரச்சாரம் மேற்கொண்டார். சென்னையில் காந்தியடிகள் பேசிய மேடைச் சொற்பொழிவுகளை திரு.வி.க. இனிய தமிழில் மொழி பெயர்த்தார், மொழிபெயர்ப்பின் அருமையை அனைவரும் பாரட்டினர், காந்தியடிகளின் நினைவில் நீங்காத இடத்தையும் பிடித்தார்.

ஜாலியன் வாலாபாக் படுகொலையைக் கண்டித்து உரையாற்ற, பாலகங்காதர திலகர் சென்னைக்கு வருகை தந்தார். திரு.வி.க. வும், திலகரும் கண்டனக் கூட்டங்களில் எழுச்சிமிகுந்த உரையாற்றினார்கள். திரு.வி.க. தன் பேச்சாற்றலால், கங்காதரரையும் கவர்ந்தார்!.

வெஸ்லியின் பள்ளியில் ஆசிரியராகவும், பின்னர் வெஸலியின் கல்லூரியில் தமிழ்த் துறைத் தலைவராகவும் திரு.வி.க. பணியாற்றினார்.

1917 ல் நடைபெற்ற சுயாட்சிக் கிளர்ச்சியின் போது அன்னிபெசன்ட் அம்மையார் ஆங்கிலேய அரசால் கைது செய்யப்பட்டார். அடக்குமுறையைக் கண்டித்து, திரு.வி.க. தாம் வகித்து வந்த கல்லூரி தமிழ்த்துறைத் தலைவர் பதவியைத் துறந்தார். தேசிய விடுதலை இயக்கத்தில் தன்னை இணைத்துக் கொண்டார்.

சென்னை மாகாணச் சங்கத்தில் அங்கத்தினராகச் சேர்ந்தார். அச்சங்கத்தின் சொற்பொழிவுகள் அனைத்தும் தாய் மொழியாம் தமிழில் அமைய வேண்டும் என்ற விதிமுறையை ஏற்படுத்தினார். தாமும் தொடர்ந்து தமிழிலேயே உரை நிகழ்த்தினார்.

திரு.வி.க. 13.09.1912 ல் கமலாம்பிகை என்பவரைத் திருமணம் செய்து கொண்டார். அவர்களுக்கு இரண்டு குழந்தைகள் பிறந்தனர். ஆண் குழந்தை, பிறந்த வாரத்திலேயே மறைந்தது. பெண் குழந்தை ஓராண்டு வளர்ந்த பின்னனர் இன்னுயிர் நீத்தது. திரு.வி.கவின் மனைவி கமலாம்பிகை எலும்புருக்கி நோயால் 1918 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் இயற்கை எய்தினார்.

'தேசபக்தன்' என்ற தமிழ் நாளிதழின் ஆசிரியராக 1917 ஆம் ஆண்டின் இறுதியில் திரு.வி.க. பொறுப்பேற்றார். 'தேசபக்தன்' இதழில் அவர் எழுதி வந்த அனல் தெறிக்கும் கட்டுரைகள், மக்களுக்கு நாட்டுப்பற்றையும், விடுதலை உணர்வையும் வேகமாய் ஊட்டின. தேசபக்தன் இதழைப் பறிமுதல் செய்யும்படி பிரிட்டிஷ் அரசாங்கம் ஆணையிட்டது. "தேச பக்தனில் அனல் தெறிக்கும் கட்டுரைகள்

எழுதுவதைத் தவிர்க்க வேண்டும்; ஜாமீன் தொகை ரூபாய் ஐந்தாயிரம் கட்ட வேண்டும்" என்று பிரிட்டிஷ் அரசாங்கம் நிபந்தனை விதித்தது. 'தேசபக்தன்' இதழை எக்காரணத்தைக் கொண்டும் நிறுத்தக்கூடாது என்றும். அடக்குமுறைக்கு அஞ்சக்கூடாது என்றும் மக்கள் வேண்டினார்கள் அதனால், பிரிட்டிஷ் அரசாங்கம் விதித்த நிபந்தனையை ஏற்று ஐயாயிரம் ரூபாய் பொறுப்புத் தொகை செலுத்தப்பட்டது. அதன் பிறகு தேசபக்தன் மீண்டும் வெளிவந்தது, தமிழ் இதழியல் வரலாற்றில் புதிய சொற்களைத் தமிழில் உருவாக்கிய பெருமை, திரு.வி.க.வுக்கே உண்டு. இரண்டாண்டுகள் 'தேசபக்தன்' இதழின் ஆசிரியராகப் பணியாற்றினார். கடைசியில் கருத்து வேறுபாடு காரணமாக அதிலிருந்து வெளியேறினார்.

பி ரூ சி யில் தொழிலாளர்கள் மற்றும் நண்பர்கள் அளித்த நன்கொடையை கொண்டு புதிய வார ஏடு 'நவசக்தி' தொடங்கப்பட்டது. அது 22.10.1920 ஆம் நாளிலிருந்து வெளிவரத் தொடங்கியது, 'நவசக்தி' வார ஏட்டுக்கு திரு.வி.க. ஆசிரியரானார்.

தொழிலாளர் இயக்கத்தில் 1917 ஆம் ஆண்டில் திரு.வி.க. ஈடுபட்டார். தொழிற்சங்க தலைவர் வாடியாவின் நட்பு ஏற்பட்டது. 1918 ஏப்ரல் 27 ஆம் நாளன்று 'சென்னைத் தொழிலாளர் சங்கம்" ஆரம்பிக்கப்பட்டது. உழைக்கும் மக்களின் ஒற்றுமை உணர்வு குறித்து திரு.வி.க. இப்படிக் கணித்தார்:-

'தென்னிந்தியாவில் எழுந்த தொழிலாளர் கிளர்ச்சியே, காட்டுத் தீ போல் நாடு முழுவதும் பரவியது. அதன் விளைவாகவே, பம்பாய், கல்கத்தா, கான்ப+ர், நாகபுரி முதலிய இடங்களில் தொழிற்சங்கங்கள் தோன்றின!"

சென்னைத் தொழிற்சங்கத்தினை நிறுவிய ஐவரில் திரு.வி.க.வும் ஒருவர். அச்சங்கத்தின் துணைத் தலைவராகவும் திரு.வி.க. தேர்ந்தெடுக்கப்பட்டார்.

இந்தியாவிலேயே தொழிலாளர்களுக்காகத் தொடங்கப்பட்ட முதல் தொழிற்சங்கம் 'சென்னைத் தொழிலாளர் சங்கம்" என்பது வரலாற்றுச் செய்தி ஆம். அடிக்கோடு இடப்படவேண்டிய முக்கியத்துவம் வாய்ந்த சரித்திர உண்மை இது.

இந்திய தேசிய கட்சியாய்த் திகழ்ந்த தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியில் அப்போது பெரியார் ஈ.வெ.இராமசாமி, - பி. வரதராசுலு நாயுடு, -

திரு.வி.கலியாணசுந்தரம் - ஆகிய மூவர் மட்டுமே மும்மூர்த்திகளாகச் செயல்பட்டு மக்களை வழிநடத்தினர்!

சென்னை பி ரூ சி யில் தொழிலாளர்கள் போராட்டம் தீவிரமாக நடைபெற்றுக் கொண்டிருந்தது. அப்போராட்டத்தை முன்னின்று நடத்தியவர் திரு.வி.க. அப்பொழுது சென்னை ஆளுநராக இருந்த வில்லிங்டன் திரு.வி.க.வை நாடு கடத்த முடிவு செய்திருந்தார். நீதிக்கட்சியின் தலைவரான தியாகராயர் தலையிட்டு ஆளுநரைச் சந்தித்தார். திரு.வி.கவை நாடு கடத்தினால் ஏற்படும் கொந்தளிப்புக்கு அரசு ஈடுகொடுக்க முடியாது என எச்சரிக்கை செய்தார், மீறி நாடு கடத்தினால் நீதிக்கட்சி அமைச்சரவையிலிருந்து பதவி விலகும் என்றும் அறிவித்தார்.

'பி ரூ சி யி;ல்' ஆலைத் தொழிலாளர்கள் 1947ல் தங்களின் கோரிக்கைகளுக்காக மிகப்பெரிய போராட்டம் நடத்தினர். அப்போராட்டத்தின் போது, அறுபது வயதைக் கடந்துவிட்ட திரு.வி.கவைக் காங்கிரஸ் ஆட்சி வீட்டுக்காவலில் வைத்தது. ஆம், நாட்டு விடுதலைக்காக பாடுபட்டவருக்கு வீட்டுச் சிறை!

அரசியலில் அரும் பெருந்தகைவராக விளங்கியவர் திரு.வி.க. ஆனால் அவருக்கு என்று ஒரு சொந்த வீடு இல்லை. வங்கியில் இருப்பு எதும் இல்லை. அவர்தம் காலில் செருப்புகூட அணிவது இல்லை. எளிய தூய கதராடையே அவர் உடுத்தினார். அவை ஒரு நாலு முழ வேட்டியும், சட்டையுமே! சில வேளைகளில் இவற்றுடன் ஒரு மேலாடை! இவ்வளவு தான் இறுதிவரை காந்திய வாழ்க்கையைக் கடைப்பிடித்தார்!

எழுத்தாளர் என்ற வகையில் கிடைத்த சிறு வருமானத்தைக் கொண்டு எளிய வாழ்க்கையே நடத்தினார். தியாகத் தொண்டிலும் தனிமனித ஒழுக்கத்திலும் தியாக சீலராகவே விளங்கினார் திரு.வி.க.

ஆங்கிலம் பேசிய மேட்டுக்குடிப் பெருமக்கள் இந்திய விடுதலைப் போரை நடத்திய காலம் வரையில், மக்கள் திரண்டு கிளர்ந்தெழவில்லை. காந்தியடிகள் செய்த மாறுதலால் அந்தந்த வட்டார மொழிகள் அரசியல் மேடைகளை ஆளத் தொடங்கின. விடுதலை உணர்வை ஊட்டி வளர்க்கத் தொடங்கின. அதனால், நாட்டின் மூலை முடுக்கெல்லாம் மக்கள் வீறுகொண்டு எழுந்தனர், விடுதலைப் போராட்டம் எக்காளமிட்டு ஓர் இயக்கமாக எங்கும் பரவிப் பெருகியது! தமிழகத்தைப் பொறுத்தவரையில் சுதந்திர எழுச்சியின் முன்னோடியாக இன்னலை எதிர்கொள்ளும் தன்னலங்கருதாத் தலைவராக விளங்கியவர் திரு.வி.க! தம் பேச்சாலும், எழுத்தாலும்,

தமிழரிடையே செந்தமிழ் உணர்வோடு, விடுதலை வேட்கையை விளையச் செய்தார்.

அண்ணல் காந்தியடிகளின் 'அகிம்சை' யுத்தம் நாடெங்கும் தீவிரமடைந்தது. அதன் தொடர்ச்சியாக உப்புச் சத்தியாகராகப் போரட்டம் நடந்தது. அப்போது பிரிட்டிஷ் அரசாங்கம் 'நவசக்தி' இதழ் வெளிவரக்கூடாது என்று ஆறு மாதம் தடை விதித்தது.

தமிழர்கள் முன்னேற்றத்துக்குத் தடையாக இருக்கும் கீழ்காண்டவைகளை உடைத்தெறிய வேண்டும் எனப் பட்டியலிடுகிறார் திரு.வி.க.

1. பல கலைகளையும், பயிலுங்கள்; வெறும் இலக்கிய இலக்கண ஏடுகளைக் கட்டி அழுவதை விட்டோழியுங்கள்.
2. ஆடல் - பாடல் - சிலம்பாட்டம் - வீர விளையாட்டுக்களில் ஆர்வம் செலுத்துங்கள்.
3. வகுப்பு பிணக்குகளிலும், பிற்போக்குத் தனத்திலும் மூழ்கியிருக்காதீர்கள்.
4. கருத்து வேற்றுமைக்கு மதிப்பளியுங்கள்.
5. பொறாமை, தன்னலம், வீண் பிடிவாதம் ஒழியுங்கள்.
6. கால மாற்றத்திற்கு ஏற்பவும,; நல்லவைகளுக்காவும் மாறாதிருக்காதீர்கள்.

'அரசியல் விடுதலையோடு பொருளாதார விடுதலையும் இணைந்த பிறகே முழு விடுதலை மலரும்' என்பது திரு.வி.கவின் நம்பிக்கை. 'சமதர்மத்தை விஞ்ஞான முறையில் ஒழுங்குபடுத்தி உலகுக்கீந்த பெருமை காரல் மார்க்சுக்கு உண்டு" என்று மார்க்சியத்தைப் போற்றினார்.

"வாக்களிப்பதை நல்வழியில் செலுத்த வேண்டும். அது மக்கள் கடமை. வேறு வழியில் செலுத்தப்படின் சனநாயகம் போலியாகிவிடும், நச்சுத் தீப் பரவி, நாட்டை எரித்துவிடும். முழு விடுதலைக்குப் பலப்பல இயல்புகள் தேவை. நமது நாட்டில் சாதி மத வெறிகளும், பணம், தயைதாட்சண்யம் முதலிய மாயைகளும் வாக்காய் பரிணமித்துச் சட்டசபைகளாதல் வெள்ளிடமலை. போதிய கல்வியறிவு, அரசியல் ஞானம் முதலியன வாய்க்கப் பெறாத மக்கள் வாக்கு, எங்ஙனம் உரிமையுணர்வினின்றும் எழும்? வாக்காளர்கள் மனோநிலை சீர்பட, ஆங்காங்கே அரசியற் பள்ளிகள் அமைத்து மக்களுக்கு போதனை செய்ய வேண்டும். இல்லையெனில் சட்டசபைகளில் தேள், பாம்பு,

கரடி, புலி முதலியன உலவுதல் நேரும்' என்றார் திரு.வி.க. இன்று நடப்பதை அன்றே கணித்தவர்! தீந்தமிழ்த் தென்றல் திரு.வி.க.வின் தீர்க்க தரிசனம் தான் என்னே?!

'பெண் நலம் ஓம்பப்படாத இடத்தில் வேறு எவ்வித நலனும் நிலவுவது அரிது. ஒரு நாடடு நலன் அந்நாட்டுப் பெண்மக்கள் நிலையைப் பொறுத்தே நிற்கும்" என்று ' பெண்ணின் பெருமை அல்லது வாழ்க்கைத் துணை' என்ற நூலில் திரு.வி.க. குறிப்பிட்டுள்ளார். பெண்களுக்கு பொருளாதார விடுதலை வேண்டும் என்று வலியுறுத்தினார். மாதர்சங்கக் கூட்டங்களில், சொற்பொழிவாற்றி விழிப்புணர்வை ஊட்டினார். மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் மயிலாடுதுறையில் 1925 ஆம் ஆண்டு நடத்திய 'தேவதாசிகள் முறை ஒழிப்பு' மாநாட்டில் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். விதவைத் திருமணத்தை ஆதரித்தார். பகுத்தறிவுக்கு ஒவ்வாத 'பால்ய மணம்' என்னும் குழந்தைத் திருமணத்தை எதிர்த்தார். அதை ஒழிப்பதற்கும் அரும்பாடுபட்டார்.

தமிழ் தென்றல் திரு.வி.க.வின் எழுத்தாற்றலை வெளியுலகுக்குக் காட்டிய முதல் நூல் அவரது 'மனித வாழ்க்கையும் காந்தியடிகளும்' என்பதாகும். இன்றைக்கும் அது தனிச் சிறப்படைய நூலாகத் திகழ்கிறது.

திரு.வி.க. பதினைந்து செய்யுள் நூற்களைப் படைத்து பைந்தமிழ் இலக்கியத்துக்கு அணிகலனாய் அளித்துள்ளார். 'பொறுமை வேட்டல்' என்ற தலைப்பில் 1942 ஆம் ஆண்டு வெளி வந்த அவரது நூலை, டாக்டர் மு.வ இருபதாம் நூற்றாண்டின் திருவாசகம் என்று புகழ்ந்து பாடி பாராட்டியுள்ளார்.

மேலும், 'காந்தியடிகள் போல் பல கட்சியினர் உள்ளத்தையும் கவரும் அரசியல் பொறுமை, - காரல் மார்க்ஸ் போல் பல மக்களையும் ஒன்று படுத்த விழையும் பொருளியல் பொறுமை - இராமலிங்க அடிகள் போல் பல சமய நெறிகளிலும் அடிப்படை ஒன்றெனக் காணும் சன்மார்க்கப் பொதுமை - திருவள்ளுவரைப் போல் எக்காலத்திற்கும் இன்றியமையாத உண்மைகளை உணர்ந்து தெளியும் வாழிவியல் பொதுமை" என்று பொதுகைத் தென்றலாய் திரு.வி.க. திகழ்வதாக டாக்டர் மு.வ தேடித் தேடிப் பாராட்டுவார்!

' பணத்தாலோ, சக்தி மிக்க பதவிகளாளோ அவர் செல்வர் அல்லர், அனால், அறிவாலும் மானுட நேயமென்னும் அன்பினாலும்; அவர்

மிகப் பெருஞ்செல்வர்" என பல்கலைச் செல்வர் டாக்டர் தெ.பொ. மீனாட்சி சுந்தரனார் திரு.வி.க. வின் பெருமையைப் பதிவு செய்து உள்ளார்.

திரு.வி.க. இனிய தமிழில் பேசினார், எழுதினார். அவருடைய தமிழ் நடை தென்றலைப் போல் மென்மையாக இருந்தது. ஆதலால் அவருக்குத் ' தமிழ்த் தென்றல்' என்றும் பட்டம் வழங்கப்பட்டது.

சர்க்கரை நோய்க்கு இரையான திரு.வி.க. வாழ்வின் இறுதியாண்டுகளில் கண்பார்வையையும் இழந்தார். முதுமையிலும், நோயாலும் பாதிக்கப்பட்டு தான் வாழ்ந்த வாடகை வீட்டில் தம் எழுபதாவது வயதில் 17.09.1953 ஆம் நாள் உயிர் நீர்த்தார்.

உயிர் பிரிந்தபின் தம் திருமேனியை உழைக்கும் மக்கள் வாழும் சூளைப்பகுதி தொழிலாளர்களிடம் ஒப்படைத்து விட வேண்டும் என்று விருப்பம் தெரிவித்திருந்தார். அவரது விருப்பப்படி, அவரது திருமேனியின் இறுதிப் பயணம் வட சென்னைச் சூளையிலிருந்து புறப்பட்டுத் தென்சென்னை மயிலாப்பூர் மயானத்தில் முடிந்தது. ஆனாலும், தமிழ் சங்கமும், தொழிற் சங்கமும் இயங்கும் வரையிலும் இங்கு தீந்தமிழ் தென்றல் வீசிக் கொண்டே இருக்கும். அதன் பயணம் முடிவதில்லை!

தமிழ்த்தென்றல் திரு.வி.க.

https://books.dinamalar.com/book/tamizhthendral-thiruveka-skuppusamy-valkai-varalaru/24773



தஞ்சை மாவட்டம், திருவாரூரில் விருத்தாசல முதலியார் – சின்னம்மாள் தம்பதிக்கு மகனாக, 1883ம் ஆண்டு துள்ளம் என்னும் சிற்றூரில் திரு.வி.க., பிறந்தார். யாழ்ப்பாணம் கதிரைவேல் பிள்ளையின் தமிழ் மாணாக்கர். மறைமலையடிகளிடம் இலக்கியமும், மயிலை மகாவித்வான் தணிகாசல முதலியாரிடம் சித்தாந்த சாத்திரமும் பயின்றார். வெஸ்லி கல்லூரியில் தமிழாசிரியராகப் பணியாற்றினார்.எதற்கும் அஞ்சாத மனம் கொண்டவர் திரு.வி.க., தம்முடைய பொருட்களை யாராவது தொட்டுப் பார்த்தால் கூட கோபம் கொள்ளும் அவர், சம்பந்தப்பட்டவருடன் சண்டைக்கும் போக தயங்காதவர். அதே நேரத்தில் தான் சண்டைக்குச் செல்வது தவறு என்றும், தன் பக்கம் நியாயம் இல்லை என்பதையும் உணர்ந்தால், அந்த சம்பவத்திற்காக வருந்தவும் செய்வார்.திரு.வி.க.,வின் சொற்பொழிவுகள் எல்லாம், 'தமிழ்த் தென்றல்' எனவும், இவரது பத்திரிகைத் தலையங்கம் பலவும், 'தமிழ்ச்சோலை' எனவும், இவரது சொற்பொழிவுகள் மேடைத் தமிழ் எனவும், செய்யுள் நூல்கள், 'அருள் வேட்டல்' எனவும் தொகுத்து வெளியிடப்பட்டுள்ளன. எளிமையும், இனிமையும், சமரச நோக்கமும் கொண்டதால், அனைவரது நெஞ்சிலும் நீங்காத இடம் பெற்றார். தமிழ் உரைநடையில் அருமையும், எளிமையும், புதுமையும் புகுத்திய பெருமைக்குரியவர்.சிறந்த தமிழ் ஆசிரியரும், தொழிலாளர் தலைவரும், பத்திரிகை ஆசிரியரும், உயர்ந்த மக்கள் தொண்டரும், அரசியல் தலைவரும், விடுதலை வீரரும் ஆன இவர் தலைசிறந்த தமிழ் அறிஞரும், தமிழ் உரைநடை இலக்கியத்தில் பெரும் புரட்சி செய்தவரும் ஆவார்.அரசியல் கருத்துக்களை ஆங்கிலத்தில் மட்டுமின்றி, தீந்தமிழிலும் தெளிவாக கூற முடியும் என்பதைத் தன் பத்திரிகைகள் மூலம் நிலை நாட்டிய, பெருமகனார் திரு.வி.க., பெருமை கூறும் நல்ல நூல்.

<<<<< முனைவர் க.சங்கர்

திரு.வி.க. : எளிமையும் வாய்மையும்

https://kizhakkutoday.in/kalaivaazhkaiyum-nilaivaazhkaiyum-02/



தமிழிலக்கிய நூல்களைத் தேடித்தேடி படித்துக்கொண்டிருந்த இளைஞரொருவருக்கு, ஒருமுறை இல்பொருள் உவமை, உள்ளுறை உவமை எனப்படும் இலக்கணக்குறிப்பைச் சார்ந்து ஓர் ஐயம் ஏற்பட்டது. சென்னையில் அவருடைய வீட்டுக்கு அருகில் வசித்த பல புலவர்களையும் அவர் அணுகி விசாரித்தார். அவருடைய ஐயத்தை அகற்றும் விதமாக ஒருவராலும் விடை சொல்லமுடியவில்லை.

இலக்கண, இலக்கியங்களில் தேர்ச்சி மிக்க பண்டிதர் ஒருவர் பின்னந்தூரில் வசிப்பதாகவும் அவரைச் சந்தித்து தெளிவு பெறலாம் என ஒருவர் வழங்கிய ஆலோசனையைக் கேட்டு, அடுத்தநாள் காலையிலேயே அந்த இளைஞர் பின்னந்தூருக்கு நடந்து சென்றார். அவர் சென்ற நேரத்தில் அப்பண்டிதர் வீட்டில் இல்லை. வீட்டில் இருந்தவர்கள் அவர் குளக்கரைக்குச் சென்றிருப்பதாகத் தெரிவித்தனர். அவர் வரும் வரைக்கும் வீட்டில் காத்திருக்க அந்த இளைஞருக்குப் பொறுமை இல்லை. குளம் இருக்கும் இடத்தைப்பற்றி விசாரித்துத் தெரிந்துகொண்டு நேரிடையாக குளத்தங்கரைக்கே சென்றுவிட்டார்.

அங்கே பண்டிதர் கரையில் நின்றுகொண்டு துணிதுவைத்துக் கொண்டிருந்தார். அவருக்கு அருகில் சென்று நின்றார் இளைஞர். அவரை ஏறிட்டுப் பார்த்த பண்டிதர் என்ன வேண்டுமென விசாரித்தார். சந்தர்ப்பச்சூழல் எதையும் பொருட்படுத்தாது, அந்த இளைஞர் தனக்கு ஏற்பட்ட இலக்கண ஐயங்களை அவரிடம் தெரிவித்தார். இளைஞரின் ஆர்வத்தைக் கண்டு மகிழ்ந்த பண்டிதரும், துவைக்கும் வேலையை

அப்படியே நிறுத்திவிட்டு எண்ணற்ற எடுத்துக்காட்டுகளோடு ஒவ்வோர் உவமையையும் ஆர்வத்துடன் விளக்கமாகச் சொன்னார். பண்டிதர் கூறிய தெளிவான விவரங்களைக் கேட்டு இளைஞரின் ஐயம் அகன்றது. நன்றி கூறி புறப்படுவதற்காகத் திரும்பினார். பண்டிதர் புன்னகைத்தபடி அவரைத் தடுத்து குளத்தில் இறங்கி நீராடும்படி கூறி கீழ்ப்படிய வைத்தார். பிறகு வீட்டுக்கு அழைத்துச் சென்று உண்ணவைத்து, மேலும் சிறிது நேரம் இலக்கணம் சார்ந்து உரையாடிவிட்டு வழியனுப்பி வைத்தார். ஐயத்தைப் போக்கிய அத்தமிழறிஞர் நாராயணசாமி ஐயர். இலக்கிய வேட்கை கொண்ட அந்த இளைஞர் திரு.வி.க. என பிற்காலத்தில் அழைக்கப்பட்ட கலியாணசுந்தரம்.

சிறுவயதிலிருந்தே பள்ளிக்குச் செல்வதிலும் கல்வி கற்பதிலும் ஆர்வம் கொண்டவராக இருந்தார் கலியாணசுந்தரம். காலில் ஏற்பட்ட சிறு பிரச்சினை காரணமாக அவர் சில ஆண்டுகள் வீட்டுக்குள்ளேயே முடங்கிக்கிடக்க வேண்டியதாயிற்று. குணமடைந்து வெஸ்லி கல்லூரியில் ஏற்கனவே படித்த நான்காவது வகுப்பில் அவர் சேர்ந்தபோது, அவருக்கு பதினான்கு வயது முடிந்திருந்தது. அங்கு உயர்நிலை வகுப்பில் அவருக்கு தமிழாசிரியராக இருந்து பாடம் கற்பித்தவர் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த கதிரைவேற்பிள்ளை. அவர் பாடம் நடத்தும் விதத்தால், இயல்பாகவே அவர் மனத்தில் தமிழிலக்கியம் மீது படிந்திருந்த ஆர்வம் பெருகியது.

பள்ளியிறுதி வகுப்பில் படித்துக்கொண்டிருந்தபோது கதிரைவேற்பிள்ளைமீது தொடுக்கப்பட்டிருந்த வழக்குகளில், அவருக்குச் சார்பாக சாட்சி கூறுவதற்காக அவரோடு சேர்ந்து கலியாணசுந்தரமும் நீதிமன்றத்துக்குச் செல்லவேண்டியிருந்தது. அதன் காரணமாக அவரால் பள்ளியிறுதிக்குரிய செலக்ஷன் தேர்வுகளை எழுதமுடியாமல் போய்விட்டது. அதனால் பள்ளித் தலைமையாசிரியர் கலியாணசுந்தரத்துக்கு, தேர்வு எழுத அனுமதி வழங்க மறுத்தார். அதே வகுப்பில் இன்னொரு ஆண்டு படித்த பிறகு தேர்வு எழுதலாம் என்று சொல்லிவிட்டார் அவர். அதை ஏற்க விரும்பாத கலியாணசுந்தரம் பள்ளியை விட்டு வெளியேறினார்.

பள்ளிக்கல்வி தடைபட்ட போதும் தக்க ஆசிரியர்களை அணுகி விரும்பியதைக் கற்கத் தொடங்கினார் கலியாணசுந்தரம். பள்ளியில் ஆசிரியராக இருந்தபோதும் கோவில்களில் புராணம் சொல்வதிலும் நாட்டம் கொண்டவராக இருந்தார் அவருடைய பழைய ஆசிரியரான கதிரைவேற்பிள்ளை. கந்தசாமி கோவிலில் ஞாயிறு தோறும் தணிகைப்புராணத்தையும் அங்காள பரமேஸ்வரி அம்மன் கோவிலிலே செவ்வாய்க்கிழமைகளில் கந்தபுராணத்தையும் வெள்ளிக்கிழமைகளில்

திருவிளையாடற் புராணத்தையும் சொல்லிவந்தார் அவர். தொடர்ந்து அவ்வகுப்புகளுக்குச் சென்று அவ்விலக்கிய நூல்களை ஆர்வத்துடன் தொடர்ந்து கேட்கத் தொடங்கினார் கலியாணசுந்தரம். இதனால் அவரிடம் தமிழிலக்கிய ஆர்வம் மேன்மேலும் பெருகியது.

அவ்வகுப்புகளுக்கு ஒதுக்கிய நேரம் போக, எஞ்சிய நேரங்களில் தணிகாசல முதலியாரிடம் சைவ நூல்களையும் சிதம்பர முதலியாரிடம் திருக்குறளையும் தேவப்பிரகாசம் பண்டிதரிடம் இராமாயணத்தையும் வில்லிபாரதத்தையும் பாம்பன் குமரகுருதாச சுவாமிகளிடம் சமஸ்கிருதத்தையும் உபநிடதங்களையும் கற்றுக்கொண்டார். புதுப்பேட்டை தோட்டத்தெருவைச் சேர்ந்த பார்சுநாத நயினாரிடம் சமணக் கோட்பாடுகளையும் இலக்கியங்களையும் கற்றுத் தேர்ச்சியடைந்தார். இராயப்பேட்டையில் அயோத்திதாஸ் பண்டிதர் நடத்திவந்த பௌத்த சங்கத்தில் திரிபிடகத்தையும் பிறநூல்களையும் கற்றார். மௌல்வியின் புதல்வரான அப்துல் கரீம் என்பவரிடம் குரானையும் தெரிந்துகொண்டார். அந்தக் காலத்தில் கிளின்பார்லோ என்பவருடைய ஆசிரியத்துவத்தில் வெளிவந்த ‘மதராஸ் டைம்ஸ்’ நாளேட்டின் இணைப்பிதழாக வெளிவந்த ‘ஷேக்ஸ்பியர் கிளப்’ என்னும் பகுதியில் வாரம்தோறும் ஷேக்ஸ்பியர், மில்டன், வேர்ட்ஸ்வொர்த், ஷெல்லி, கீட்ஸ் போன்றோரின் படைப்புகளை அறிமுகப்படுத்தி வெளிவரும் கட்டுரைகளைப் படித்து ஆங்கில இலக்கியம் சார்ந்த அறிவையும் வளர்த்துக்கொண்டார்.

அத்தருணத்தில் எதிர்பாராத விதமாக அவருடைய குடும்பத்தை வறுமை சூழ்ந்தது. லோயர் செகண்டரி தேர்விலும் புக் கீப்பிங் தேர்விலும் தேர்ச்சியடைந்த சான்றிதழ்கள் மட்டுமே அவர் கல்வியறிவு மிக்கவர் என்பதற்குச் சாட்சிகளாக விளங்கின. அச்சான்றிதழ்களின் துணையோடு கலியாணாசுந்தரத்தின் சகோதரர் ஸ்பென்சர் கம்பெனியில் அவருக்கு ஒரு வேலை கிடைக்க ஏற்பாடு செய்தார். அப்போது அவருக்கு வயது பத்தொன்பது.

1902ஆம் ஆண்டில் சென்னைக்கு வந்த சுரேந்திரநாத் பானர்ஜியின் ஆங்கில உரையைக் கேட்ட கலியாணசுந்தரம் சுதந்திரப்போராட்டத்தின் மீது ஆர்வம் கொண்டார். லஜபதிராய், திலகர், விபின் சந்திரபால் ஆகிய மூவரும் தேசமெங்கும் பயணம் செய்து தம் உரைகளால் மக்களுக்கு சுதந்திர வேட்கையை ஊட்டினர். வங்காளத்திலிருந்து வெளிவந்த ‘வந்தே மாதரம்’ பத்திரிகையும் மகாகவி பாரதியாருடைய ‘இந்தியா’ பத்திரிகையும் தேசப்பற்றை ஊட்டும் கட்டுரைகளை வெளியிட்டன. அவற்றை வாங்கிப் படித்த கலியாணசுந்தரத்தின் நெஞ்சில் தேசபக்தி வேகம் நிறைந்தது.

அக்கட்டுரைகள் வழியாக அறிந்த அரசியல் செய்திகளை ஒவ்வொரு நாளும் ஓய்வு நேரத்தில் ஸ்பென்சர் கம்பெனி ஊழியர்களிடம் படித்துக் காட்டவும் மொழிபெயர்த்துச் சொல்லவும் தொடங்கினார் அவர். அதன் விளைவாக கலியாணசுந்தரம் தன் இருபத்தைந்தாவது வயதில் ஸ்பென்சர் கம்பெனி நிறுவனத்தின் வேலையை இழந்தார்.

சொந்த முதலீட்டில் ஓர் அச்சுக்கூடத்தைத் தொடங்கி பெரிய புராணத்தையும் திருமந்திரத்தையும் புதிய பதிப்புகளாகக் கொண்டுவந்தார். ஆயினும் இரண்டாண்டுகளில் ஏற்பட்ட பொருளிழப்பைத் தாங்கமுடியாமல் அச்சுக்கூடத்தை விற்கவேண்டியிருந்தது. நண்பர் ஒருவருடைய உதவியால் ஆயிரம் விளக்கு பகுதியைச் சேர்ந்த வெஸ்லியன் மிஷன் பள்ளியில் தமிழாசிரியராக வேலை கிடைத்தது. அதற்குப் பிறகே அவர் திருமணம் செய்துகொண்டார். ஆறு ஆண்டுகளுக்குப் பிறகு அவர் படித்த இராயப்பேட்டை வெஸ்லி கல்லூரியிலேயே தமிழாசிரியராகப் பணிபுரியும் வாய்ப்பு கிடைத்தது. ஆயிரம் விளக்கு பள்ளியிலிருந்து இராயப்பேட்டை பள்ளிக்குச் சென்று சேர்ந்தார் கலியாணசுந்தரம்.

1914ஆம் ஆண்டில் முதல் உலகப்போர் மூண்டது. அப்போதுதான் இந்தியாவில் அன்னிபெசன்ட் அம்மையார் ஹோம்ரூல் இயக்கத்தைத் தொடங்கினார். இரண்டு மூன்று ஆண்டுகளிலேயே அந்த இயக்கம் தேசமெங்கும் வேரூன்றியது. அதை விரும்பாத ஆங்கில அரசு அன்னிபெசன்ட் அம்மையாரை 1917இல் ஜூன் மாதத்தில் கைது செய்து சிறையில் அடைத்தது. ஆனால் அரசின் எண்ணத்துக்கு மாறாக தேசமெங்கும் சுயராஜ்ஜிய எண்ணம் ஆழமாக வேரூன்றத் தொடங்கியது. 1916இல் தொடங்கிய ஜஸ்டிஸ் கட்சி, ஹோம்ரூல் இயக்கத்தை எதிர்த்து குரல் கொடுக்கத் தொடங்கியது. பிராமணரல்லாதோர் முன்னேற்றம் தொடர்பாகப் பேசிப் பேசி சாதிகளின் அடிப்படையில் மக்களிடையில் பிளவை உருவாக்க முயற்சி செய்தது. ஒரே நேரத்தில் தெலுங்கு மொழியில் ஆந்திர பிரகாசிகா என்றும் ஆங்கிலத்தில் ஜஸ்டிஸ் என்றும் தமிழில் திராவிடன் என்னும் தலைப்பிலும் பத்திரிகைகளைக் கொண்டுவந்து விடுதலை இயக்கத்தை எதிர்த்தது. ஜஸ்டிஸ் கட்சி எழுப்பிய குரலைக் கடந்து மக்களிடையே சுதந்திர வேட்கையை உருவாக்கவேண்டியது தேசபக்தர்களின் கடமையாக இருந்தது. பல இடங்களில் பொதுக்கூட்டங்களைக் கூட்டி தலைவர்கள் உரையாற்றினர்.

1917இல் செப்டம்பர் மாதத்தில் கோகலே மண்டபத்தில் திவான்பகதூர் கேசவப்பிள்ளை தலைமையில் ஒரு கூட்டம் நடைபெற்றது. அச்சமயத்தில் ‘திராவிடரும் காங்கிரசும்’ என்னும் தலைப்பில் முதன்முதலாக மேடையேறி கலியாணசுந்தரம் உரையாற்றினார்.

அவ்வுரையில் திராவிடர் வரலாற்றையும் ஆரியர் வரலாற்றையும் அவற்றுக்கிடையில் உள்ள முரண்பாடுகளையும் சுருக்கமாகவும் விளக்கமாகவும் எடுத்துரைத்தார் அவர். எல்லா வகுப்பாரும் ஒன்றாக ஓரணியில் நின்று சுதந்திரத்துக்காகப் போராடவேண்டிய தருணத்தில் அவ்வாறு ஒன்றுபடாமல் ஒதுங்கி வகுப்புவாத எரியூட்டுவது நாட்டைப் பாழாக்கும் என்று தெளிவூட்டினார். ஜஸ்டிஸ் கட்சி தென்னாட்டுப் பிராமணரல்லாதோர் அனைவருக்கும் உரியதாக மாறாது என்றும் தென்னாட்டுப் பிராமணரல்லாதோரில் பெரும்பான்மையோர் காங்கிரஸ் மனப்பான்மை கொண்டவர்கள் என்றும் தெரிவித்தார். அதன் விளைவாக சென்னை மாகாண சங்கம் என்னும் பெயரில் ஓர் அமைப்பு உருவானது. கேசவப்பிள்ளை, கோவிந்ததாஸ், ஈ.வெ.இராமசாமி நாயக்கர், நாகை பக்கிரிசாமி பிள்ளை, சீர்காழி சிதம்பரநாத முதலியார், ஜார்ஜ் ஜோசப், தி.வி.கோபாலசாமி முதலியார், குருசாமி நாயுடு, வரதராஜுலு நாயுடு, சர்க்கரைச்செட்டியார் ஆகியோரோடு அந்த அமைப்பில் கலியாணசுந்தரமும் இருந்தார். அனைவரும் அவரை, திருவாரூர் என்னும் அவருடைய முன்னோர் வாழ்ந்த ஊரையும் விருத்தாசல முதலியார் என்ற தந்தையாருடைய பெயரையும் முன்னொட்டாக் கொண்டு திரு.வி.க. என அழைக்கத் தொடங்கினர்.

சென்னை மாகாண சங்கத்தின் கருத்துகளை மக்களிடையில் கொண்டு சேர்ப்பதற்காக ஒரு பத்திரிகையைத் தொடங்க நினைத்தனர் அதன் அமைப்பாளர்கள். அவர்களுடைய கூட்டுமுயற்சியால் ஓர் அச்சுக்கூடம் வாங்கப்பட்டது. அதன் சார்பில் தொடங்கப்பட்ட தேசபக்தன் என்னும் தினசரிப்பத்திரிகையின் ஆசிரியர் பொறுப்பை ஏற்பதற்காக, 05.12.1917 அன்று வெஸ்லி கல்லூரியில் செய்துவந்த தமிழாசிரியர் பணியை உதறி வெளியே வந்தார் திரு.வி.க. தேசபக்தன் பத்திரிகையில் அவர் பயன்படுத்திய தூய, எளிய தமிழ்ச்சொற்களும் ஆவேசமான நடையும் அனைவரையும் கவர்ந்தன.

1917இல் ரஷ்யாவில் நடைபெற்ற மக்கள் புரட்சியும் பொதுவுடைமைக் கட்சிக்குக் கிடைத்த வெற்றியும் உலகத்தின் கவனத்தை ஈர்த்த செய்திகளாகும். சொந்த முயற்சியால் புரட்சி தொடர்பான செய்திகளைப் படித்துப் புரிந்துகொண்ட திரு.வி.க.வின் நெஞ்சில் தொழிலாளர் வாழ்க்கை முன்னேற்றத்துக்காக உழைக்கும் ஆர்வம் பிறந்தது. அப்போது மில் தொழிலாளர்களின் துன்பங்களை முன்வைத்து கேசவபிள்ளை பல கட்டுரைகளை ‘இந்தியன் பேட்ரியாட்’ என்னும் ஆங்கிலப்பத்திரிகையில் தொடர்ச்சியாக எழுதிவந்தார். அவற்றில் முக்கியமான பல கட்டுரைகளை தமிழில் மொழிபெயர்த்து தேசபக்தன் இதழிலும் வெளியிட்டார் திரு.வி.க.

02.03.1918 அன்று ஜங்கா ராமியம்மாள் பங்களாவில் ‘வேங்கடேச குணாமிர்த வர்ஷிணி சபை’ சார்பில் நடைபெற்ற கூட்டத்தில் பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்கள் கலந்துகொண்டனர். அக்கூட்டத்தில் உரையாற்றிய திரு.வி.க. மேற்கு நாட்டில் தொழிலாளர் இயக்கம் தோன்றி வளர்ந்த வரலாற்றையும் தொழிற்சங்கத்தின் அவசியத்தையும் எடுத்துரைத்தார். அதைக் கேட்டு உற்சாகம் கொண்ட தொழிலாளர்கள் தமக்காகவும் ஒரு தொழிற்சங்கத்தை அமைத்துக்கொள்ள வேண்டும் என்று விரும்பினர். அது எப்போது அமைக்கப்படும் என்று உற்சாகத்துடன் கேட்கவும் தொடங்கினர். அதன் விளைவாக 27.04.1918 அன்று சென்னைத் தொழிலாளர் சங்கம் உருவானது. வாடியா தலைவராகவும் கேசவப்பிள்ளையும் திரு.வி.க.வும் உதவித்தலைவராகவும் பொறுப்பேற்றுக்கொண்டனர்.

அன்றுமுதல் தொழிலாளர்கள் வசிக்கும் பகுதிதோறும் சென்று தொழிற்சங்கம் அமைப்பதை ஒரு கடமையாகவே மேற்கொண்டார் திரு.வி.க. டிராம்வே தொழிலாளர் சங்கம், எம்.அன்ட்.எஸ்.எம்.தொழிற்சங்கம், மண்ணெண்ணெய் தொழிலாளர் சங்கம், அச்சுத்தொழிலாளர் சங்கம், நாவிதர் சங்கம், தோட்டிகள் சங்கம், தென்னிந்திய ரயில்வே தொழிலாளர் சங்கம், அலுமினியம் தொழிலாளர் சங்கம், மதுரை நெசவுத்தொழிலாளர் சங்கம் என எண்ணற்ற சங்கங்களை திரு.வி.க. உருவாக்கி வழிநடத்தினார்.

அதே சமயத்தில், சென்னை மாகாணசங்கத்தின் முதலாண்டு நிறைவு விழா தஞ்சையில் நடைபெற்றது. ‘இந்தியன் பேட்ரியாட்’ பத்திரிகையின் ஆசிரியரான கருணாகர மேனன் அந்நிகழ்ச்சிக்குத் தலைமை வகித்தார். அம்மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட பல தீர்மானங்களில் தமிழ்ப்பயன்பாடு பற்றிய தீர்மானம் மிகவும் முக்கியமானது. திரு.வி.க. அதை வழிமொழிந்து உரையாற்றினார். பொதுக்கூட்டங்களில் தமிழர்கள் தாய்மொழியில் தாய்மொழியிலேயே பேசவேண்டும் என்பதை அவர் வலியுறுத்தினார். ‘தமிழில் பேசத் தெரியாது’ என்றுரைத்து தலைவர்கள் மேடைகளில் ஆங்கிலத்தில் முழங்கி வந்த காலம் அது. திரு.வி.க. முன்னெடுத்த கிளர்ச்சியால் அந்நிலை கொஞ்சம் கொஞ்சமாக மாற்றமடையத் தொடங்கியது.

கிலாபத் கிளர்ச்சி, சத்தியாகிரக இயக்கம், பஞ்சாப் படுகொலை ஆகியவை நிகழ்ந்த காலகட்டத்தில் தேசபக்தன் நாளேட்டில் வெளிவந்த கட்டுரைகள் மக்களிடையே எழுச்சியைத் தூண்டும் வகையில் இருந்தன. அரசு அதிகாரிகள் பத்திரிகை அலுவலகத்துக்கு பலமுறை வாய்மொழி எச்சரிக்கைச் செய்திகளை அனுப்பி வைத்தனர். ஆயினும் தேசபக்தன் தன் போக்கை மாற்றிக்கொள்ள விரும்பவில்லை.

அதனால் காவல்துறை திரு.வி.க.வைக் கண்டு பறிமுதல் கட்டளையை வழங்கிவிட்டுச் சென்றது. பல வகையாலும் முயற்சி செய்து ஐயாயிரம் ரூபாய் பணத்தைத் திரட்டி எடுத்துச் சென்று நீதிமன்றத்தில் செலுத்திய பிறகே தேசபக்தன் இதழை மீண்டும் நடத்த அனுமதி கிடைத்தது.

அரசாங்கத்தை எதிர்த்து கிளர்ச்சி நடவடிக்கைகளில் ஈடுபடக்கூடியவர்களை அடக்குவதற்காக ஆங்கிலேய அரசு ரௌலட் சட்டத்தை 1919இல் இயற்றியது. அப்போது காந்தியடிகள் உடல்நலம் குன்றிய நிலையில் சபர்மதி ஆசிரமத்தில் ஓய்வெடுத்துக்கொண்டிருந்தார். அரசு இயற்றிய சட்டத்தைப்பற்றி அறிந்துகொண்டதும் சத்தியாகிரகப் பிரதிக்ஞையைத் தயார் செய்துகொண்டு தேசம் தழுவிய ஒரு பிரயாணத்தை உடனடியாகத் தொடங்கினார். அதன் ஒரு பகுதியாக சென்னையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கூட்டத்தில் கலந்துகொள்வதற்காக 18.03.1919 அன்று சென்னைக்கு வந்தார் காந்தியடிகளைச் சந்திக்க விரும்பிய திரு.வி.க. சேலம் விஜயராகவாச்சாரியாரைச் சந்தித்து கடிதமொன்றைப் பெற்றுக்கொண்டு அரக்கோணம் ரயில் நிலையத்தில் வண்டி நின்றபோது காந்தியடிகளைச் சந்தித்தார். தேசபக்தன் இதழைப்பற்றியும் அதில் வெளிவரும் கட்டுரைகளைப்பற்றியும் தமிழ், ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளிலும் அவருக்கிருந்த மொழிப்புலமையைப்பற்றியும் திரு.வி.க.விடம் ஆவலுடன் விசாரித்துத் தெரிந்துகொண்டார் காந்தியடிகள். அன்று நடைபெறும் கூட்டத்தில் தன்னுடைய உரையை ஆங்கிலத்திலிருந்து தமிழில் மொழிபெயர்க்குமாறு சொல்லி திரு.வி.க.வை தன்னோடு அழைத்துச் சென்றார். சென்னை கூட்டத்தில் சத்தியாகிரக பிரதிக்ஞையை விளக்கி உரையாற்றிவிட்டு, விருப்பமிருப்பவர்கள் அதில் கையெழுத்திடலாம் என்று அறிவித்தார். திரு.வி.க.வும் சத்தியாகிரக உடன்படிக்கையில் கையெழுத்திட்டார்.

06.04.1919 அன்று சத்தியாகிரக நாளாக கொண்டாடப்படவேண்டும் என தெரிவித்துவிட்டு காந்தியடிகள் தன் பயணத்தைத் தொடர்ந்தார். சென்னை நகரத்தை பல வட்டாரங்களாகப் பிரித்து, கொண்டாட்டத்துக்கான ஏற்பாடுகளை அனைவரும் செய்தனர். இராயப்பேட்டை வட்டாரத்தின் பொறுப்பை திரு.வி.க. ஏற்றுக்கொண்டு எண்ணற்ற தொண்டர்களை அந்நிகழ்ச்சியில் பங்குபெறச் செய்தார். காந்தமென கவர்ந்திழுத்த திரு.வி.க.வின் பேச்சாற்றல் பல இளைஞர்களை சத்தியாகிரகத் தொண்டர்களாக உருமாற்றியது.

அதே 1919இல் டிசம்பர் மாதத்தில் திலகர் சென்னைக்கு வந்தார். வ.உ.சிதம்பரம் பிள்ளை, சுப்பராய காமத் ஆகியோருடன் திரு.வி.க.வும் சென்று அவரைச் சந்தித்து உரையாடினார். திரு.வி.க.வின் தெளிவான கருத்துகள் திலகரைப் பெரிதும் கவர்ந்தன. புறப்படும்போது அவரை ஒருமுறை புனாவுக்கு வந்து செல்லுமாறு வேண்டுகோள் விடுத்துவிட்டுச் சென்றார் திலகர். துரதிருஷ்டவசமாக 01.08.1920 அன்று திலகர் இயற்கையெய்திவிட்டார். திரு.வி.க.வும் திட்டமிட்டபடி புனாவுக்குச் செல்லமுடியாமல் போனது.

திரு.வி.க. பெயரில் பதிவு செய்யப்பட்டிருந்த அச்சுக்கூடத்தை பத்திரிகையின் நலம்விரும்பிகளில் ஒருவரான காமத் என்பவர் அடகுவைத்து பணம் பெற்ற செய்தி திரு.வி.க.வின் செவியை எட்டியது. அச்செய்தி உண்மையே என்பதை விசாரணைக்குப் பிறகு தெரிந்துகொண்ட திரு.வி.க. தேசபக்தன் பொறுப்பிலிருந்து விலக முடிவெடுத்தார். தன் நிலையை விளக்கி ஒரு கட்டுரையாக எழுதி வெளியிட்ட பிறகு 22.07.1920 அன்று பத்திரிகையிலிருந்து விலகினார்.

திரு.வி.க. தேசபக்தன் இதழைவிட்டு வெளியேறிய செய்தி காட்டுத்தீயென தமிழகமெங்கும் பரவி அதிர்ச்சியலையை ஏற்படுத்தியது. உடனே வேறொரு பத்திரிகையைத் தொடங்கும்படி பலர் நேரில் சந்தித்து ஊக்கமூட்டிச் சென்றனர். சென்னை பங்கிம்ஹாம் கர்நாடிக் மில் தொழிலாளர்கள் ஐயாயிரம் ரூபாய் நிதி திரட்டிக் கொண்டுவந்து திரு.வி.க.விடம் கொடுத்தனர். இன்னும் சில நண்பர்களும் இப்படி நன்கொடை திரட்டிவந்து அவரிடம் அளித்தனர். அதை மூலதனமாகக் கொண்டு திரு.வி.க. ஓர் அச்சுக்கூடத்தை வாங்கி ‘சாது அச்சுக்கூடம்’ என்று பெயர் சூட்டினார். நண்பர்களுடன் கலந்து பேசி நவசக்தி என்னும் பெயரில் ஒரு வாரப் பத்திரிகையைத் தொடங்கினார். முதல் பத்திரிகை 22.10.1920 அன்று வெளிவந்தது. வாரப்பத்திரிகை என்பதால், அரசியல், சமூக சீர்திருத்தம், பெண் நலம், மொழிச்சிறப்பு, கலை என பல களங்கள் சார்ந்து படைப்புகளை எழுதி வெளியிட்டார். தேவையான பண உதவி செய்வதாகவும் நவசக்தி இதழை தினசரிப்பத்திரிகையாக நடத்துமாறும் பலர் திரு.வி.க.வை அணுகி ஆலோசனைகளை வழங்கினர். ஆனால் திரு.வி.க. எதற்கும் வளைந்துகொடுக்கவில்லை. நவசக்தியை வாரப் பத்திரிகையாகவே தொடர்ந்து நடத்திவந்தார்.

1920இல் தொடங்கிய ஒத்துழையாமை இயக்கத்தில் நாடுமுழுதும் ஆயிரக்கணக்கான தொண்டர்கள் உற்சாகத்துடன் பங்கேற்று சிறை சென்றவண்ணம் இருந்தனர். திரு.வி.க.வுக்கும் ஒத்துழையாமை

இயக்கத்தில் பங்கேற்க வேண்டும் என்னும் ஆவல் இருந்தது. ஆனால் பல்வேறு தொழிற்சங்க நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த அவரால், போராட்டத்தின்பால் போதிய கவனம் செலுத்த இயலவில்லை. எதிர்பாராத விதமாக பக்கிங்ஹாம் கர்நாடிக் மில்லில் உருவான தொழிலாளர் போராட்டம் மிகப்பெரிய அளவில் பரவி பல மாத காலம் தொடர்ந்து நீடித்தது. ஏறத்தாழ பதின்மூன்றாயிரத்துக்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் அப்போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

அப்போராட்டத்தை விரும்பாத பலர் தொழிலாளர்களிடையில் ஊடுருவி அதை வகுப்புக்கலவரமாக திசைதிருப்ப முயற்சி செய்தனர். தொழிலாளர் பாதுகாப்புச்சட்டம் என எதுவும் இல்லாத அக்காலத்தில் முதல் தடுப்பு நடவடிக்கையாக திரு.வி.க.வைக் கைது செய்து அந்தமானுக்கு அனுப்பிவைக்க முடிவெடுத்தது அரசு. திரு.வி.க.வை நேரில் அழைத்துப் பேசினார் கவர்னர். வகுப்புக்கலவரத்துக்கும் தீவைப்புக்கும் கொலைகளுக்கும் தொழிற்சங்கமே பொறுப்பு என கவர்னர் குற்றம் சுமத்தினார். திரு.வி.க. அதை மறுத்தார். பேச்சு வார்த்தை தோல்வியில் முடிவடைய சோர்வோடு வீட்டுக்குத் திரும்பினார் திரு.வி.க. நல்ல வேளையாக, அத்தருணத்தில் பிட்டி தியாகராயர் குறுக்கீட்டால் திரு.வி.க.வை நாடு கடத்தும் திட்டம் அப்போதைக்கு கைவிடப்பட்டது.

1925ஆம் ஆண்டில் நவம்பரில் காஞ்சிபுரத்தில் நடைபெற்ற தமிழ்நாடு காங்கிரஸ் மாநாட்டுக்கு திரு.வி.க தலைமை வகித்தார். அதில் வகுப்புவாரி பிரதிநிதித்துவம் கோரும் தீர்மானமொன்றை ஈ.வே.ராமசாமி நாயக்கரின் ஆதரவோடு எஸ்.ராமநாதன் என்பவர் கொண்டுவந்தார். அது பிளவுப்பார்வை எனக் கருதிய திரு.வி.க. அத்தீர்மானத்தை நிராகரித்தார். இதனால் ஈ.வே.ராமசாமி நாயக்கருக்கும் திரு.வி.க.வுக்கும் கருத்து வேறுபாடு எழுந்தது. அதன் காரணமாக அந்த அரங்கத்திலும் அரங்கத்துக்கு வெளியேயும் திரு.வி.க. பிறர் பழிச்சொல்லுக்கு ஆளானார். ஈ.வே.ரா. காங்கிரஸை விட்டு வெளியேறினார். ஆயினும் அதைக் கண்டு மனம் கலங்காமல் திரு.வி.க. தன் நிலைபாட்டில் உறுதியாக இருந்தார்.

1925இல் கான்பூரில் கூடிய இந்திய தேசிய காங்கிரஸ் நடைபெறவிருக்கும் தேர்தலில் பங்கெடுக்கும் முடிவை எடுத்தது. சட்டசபையைக் கைப்பற்றினால் மட்டுமே மக்கள் காங்கிரஸ் சார்பினராக இருப்பதை அரசுக்கு உணர்த்தமுடியும் என்றும் வேறொரு அரசு உருவாகாத வகையில் முட்டுக்கட்டையிட்டு ஒத்துழையாமை மீண்டும் மீட்டெடுக்கமுடியும் என்றும் மேடைகளில் முழக்கமிடப்பட்டது. திரு.வி.க.வும் அதை ஏற்று தொடர் பிரச்சாரத்தில்

ஈடுபட்டார். ஜஸ்டிஸ் கோட்டையாக விளங்கிய செங்கற்பட்டு மாவட்டத்தின் பொறுப்பு திரு.வி.க.விடம் ஒப்படைக்கப்பட்டது.

எங்கெங்கும் பிரச்சார அலை வீசிக்கொண்டிருந்த நேரத்தில் காங்கிரஸ் கட்சிக்குப் பெரும்பான்மை கிடைத்தால் முட்டுக்கட்டை இடுவதற்குப் பதிலாக அரசு அமைக்கவே முயற்சி செய்யும் என்னும் வதந்தி திடீரென பரவியது. அதைக் கேட்டு சற்றே மனக்குழப்பத்தில் ஆழ்ந்தார் திரு.வி.க. தெளிவுபெறும் பொருட்டு அடுத்தநாளே சென்னையிலேயே இருந்த ஸ்ரீநிவாச ஐயங்காரைச் சந்தித்து வதந்தியைப்பற்றி தெரிவித்தார். சட்டசபையில் பெரும்பான்மை கிடைத்தால் காங்கிரஸ் நேரடியாக ஒருபோதும் ஆட்சியமைக்க முயற்சி செய்யாது என்றும் சுயேச்சைகள் ஆட்சியமைக்க மறைமுகமாக ஆதரவு கொடுக்கும் என்றும் அவர் தெரிவித்தார். அதைக் கேட்டு மனமுடைந்து சோர்வோடு வீடு திரும்பிய திரு.வி.க. அடுத்த நாளே செயற்குழு பொறுப்பிலிருந்து விலகுவதாகக் கடிதம் எழுதி அனுப்பிவிட்டு வெளியேறினார். அவருக்காகக் காத்திருந்த தொழிற்சங்கப்பணிகள் அவரை ஆட்கொண்டன.

தொழிற்சங்கப்பணிகள், பெண் முன்னேற்றம் சார்ந்த பணிகள், பத்திரிகைப்பணி, எழுத்துப்பணி என பல பணிகளில் வற்றாத ஊக்கத்துடன் தொடர்ந்து பாடுபட்டார் திரு.வி.க. ராமாமிர்தம் அம்மையார் 1925இல் இசைவேளாளர் மாநாட்டைக் கூட்டியபோது, அதற்குத் தலைமையேற்று உரையாற்றினார் திரு.வி.க. அம்மையாரின் நோக்கமான தேவதாசி முறை ஒழிப்பை முன்வைத்து திரு.வி.க. எழுதிய கட்டுரைகளும் சொற்பொழிவுகளும் முக்கியமானவை. குழந்தைமணத் தடுப்புச் சட்டமான சாரதா சட்டத்துக்கு ஆதரவாகவும் திரு.வி.க. பல கட்டுரைகளை எழுதினார். விதவை மறுமணத்துக்கும் அவர் ஆதரவாக நின்றார். குடியாத்தத்தைச் சேர்ந்த இளைஞரொருவர் பள்ளிக்கொண்டை என்னும் கிராமத்தைச் சேர்ந்த விதவை ஒருவரை மறுமணம் செய்துகொள்ள முன்வந்தபோது, திரு.வி.க. அத்திருமணத்துக்குத் தலைமையேற்று நடத்தி வைத்தார்.

பிறர் முன்னேற்றம் தொடர்பான சிந்தனைகளே திரு.வி.க.வின் மனத்தில் நிறைந்திருந்தன. ஒருபோதும் தன் சொந்த முன்னேற்றம் தொடர்பாக அவர் நினைத்துப் பார்த்ததே இல்லை. ஒருமுறை அவர் வாடகை வீட்டில் வசிப்பதை அறிந்த ஸ்ரீநிவாச ஐயங்கார் அவருக்காக வீடும் வாகனமும் ஏற்பாடு செய்வதாகக் கூறினார். “சொந்த வீடும் காரும் எனக்கு எதற்கு? வசிப்பதற்கு வாடகைக்கு ஒரு வீடு இருக்கிறது. அச்சுக்கூடம் இருக்கிறது. பத்திரிகை இருக்கிறது. நான் எழுதும் புத்தகங்களால் ஓரளவு வருவாயும் இருக்கிறது. இதற்கு மேல் என்ன

வேண்டும்? தேவைக்கு மேல் விரும்புவது அறமல்ல” என்று கூறி மறுத்துவிட்டார். அவருடைய மணிவிழா கொண்டாடப்பட்ட சமயத்தில் ராஜா சர் அண்ணாமலை செட்டியார் போன்றோர் அவரைக் கௌரவிக்கும் விதமாக அவருக்கு பணமுடிப்பு வழங்கத் திட்டமிட்டனர். ஆயினும் அதை முன்கூட்டியே அறிந்துகொண்ட திரு.வி.க. அந்த ஏற்பாட்டை உறுதியாக மறுத்துவிட்டதால், அம்முயற்சி அப்படியே கைவிடப்பட்டது.

கால ஓட்டத்தில் திரு.வி.க. தன் தமையனாரை இழந்து, அச்சுக்கூடத்தின் வருவாயும் குறைந்து, நீரிழிவு நோயால் கண்பார்வை இழந்து துன்பப்படும் நிலை ஏற்பட்டது. அதைக் கண்டு மனம் வருந்திய உலகநாத முதலியார் என்னும் பெருஞ்செல்வர் அவருக்கு பண உதவி செய்ய முன்வந்தார். உங்கள் அன்புக்கு நன்றி என்று சொல்லி, அவருடைய உதவியைப் பெற்றுக்கொள்ள மறுத்துவிட்டார் திரு.வி.க. ஆயினும் அப்படிச் செல்ல மனமொப்பாத செல்வந்தர் ஆயிரம் ரூபாய்க்கு ஒரு காசோலையை எழுதி அமைதியாக திரு.வி.க. படுத்துறங்கும் தலையணைக்கு அடியில் வைத்துவிட்டுச் சென்றார். சிறிது நேரம் கழித்து இன்னொருவர் அதைக் கண்டெடுத்து திரு.வி.க.விடம் கொடுத்த போது, ஒரு கடிதத்தோடு அந்தக் காசோலையை அவருக்கே அஞ்சலில் திருப்பி அனுப்பிவைத்துவிட்டார் திரு.வி.க.

கண்பார்வை மங்கி உடல்நலம் குன்றியிருந்த சமயத்திலும் தொழிற்சங்க இயக்கச் செயல்பாடுகளில் தொடர்ந்து ஈடுபட்டு வந்தார் திரு.வி.க. ஆங்கிலேயர் ஆட்சியிலிருந்து இந்தியாவுக்கு விடுதலை கிடைத்து தமிழ் மாகாணத்தில் காங்கிரஸ் ஆட்சி செய்துகொண்டிருந்த தருணத்தில் பங்கிம்ஹாம் ஆலையில் ஒரு வேலை நிறுத்தம் நடைபெற்றது. நிர்வாகத்தின் பிடிவாதப் போக்கினால் போராட்டம் மாதக்கணக்கில் நீண்டுகொண்டே சென்றது. தொழிற்சங்கத் தலைவரான அந்தோணிப்பிள்ளையும் திரு.வி.க.வும் தொழில் அமைச்சரைச் சந்தித்து விவரங்களைத் தெரிவித்து நிர்வாகத்துடன் பேச்சுவார்த்தை நடத்தி ஒரு முடிவை எட்ட உதவுமாறு கேட்டுக்கொண்டனர். அவர்கள் சொல்வதை பொறுமையாக அமைச்சர் கேட்டுக்கொண்டபோதும் எவ்விதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை. மாறாக, சில தினங்களுக்குப் பிறகு அந்தோணிப்பிள்ளையைக் கைது செய்து சிறையில் அடைக்க ஏற்பாடு செய்தார்.

பெரம்பூரில் நடைபெறவிருந்த கூட்டத்துக்கும் அந்த அமைச்சர் தடை விதித்தார். கூட்டம் நடைபெறும் இடத்துக்கு திரு.வி.க. சென்ற பிறகே அவரிடம் தடை ஆணை விதிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டது.

எதுவும் பேசாத திரு.வி.க. கூட்டம் நடைபெறவிருந்த இடத்திலிருந்து வெளியேறி மௌனமாக நடக்கத் தொடங்கினார். என்ன காரணம் என்று புரியாவிட்டாலும் தொழிலாளர்கள் அனைவரும் அவரைப் பின்பற்றி நடந்தனர். காவலர்களும் ஒன்றும் புரியாமல் திகைத்து நின்றனர். நீண்ட நேரம் நடந்து சென்ற திரு.வி.க. திருவள்ளூருக்குச் சென்ற பிறகே நின்று திரும்பிப் பார்த்தார். அவரைப் பின்தொடர்ந்து வந்த தொழிலாளர்கள் அனைவரும் அவரைச் சுற்றி நின்றனர். அரசின் தடை உத்தரவு சென்னை நகர எல்லைக்குள் மட்டுமே செல்லுபடியாகும். திருவள்ளூர் செங்கற்பட்டு மாவட்ட எல்லைக்குள் இருக்கும் ஊர். இங்கு யாரும் நம்மைத் தடுக்கமுடியாது என்று சொல்லிவிட்டு தொழிலாளர்களிடையில் ஊக்கமுடன் உரையாற்றத் தொடங்கிவிட்டார். அந்த அளவுக்குத் தொழிலாளர் பிரச்சினைகளில் ஆர்வம் கொண்டவராக விளங்கினார். திரு.வி.க. வீட்டுக்குத் திரும்பிய திரு.வி.க.வை ஒரு சிறப்பு உத்தரவின் வழியாக போராட்டம் முடிவெய்தும் வரைக்கும் வீட்டுக்காவலிலேயே வைத்திருந்தது அரசு.

காந்தியடிகளின் கொள்கையைப் பின்பற்றி திரு.வி.க. மக்கள் தொண்டாற்றுவதே தனக்குரிய வாழ்க்கை முறை என முடிவெடுத்து இயங்கத் தொடங்கிய பிறகு, அவர் தன் தேவைகளை முடிந்த அளவு குறைத்துக்கொண்டு வாழ்வதற்குப் பழகிக்கொண்டார். பயணங்களில் கூட மிகுதியாக எதையும் சுமந்து செல்லமாட்டார். நாலுமுழக் கதர் வேட்டி, கதர் ஜிப்பா, கழுத்தில் ஒரு கதர்த்துண்டு, கையில் ஒரு பை. அதிலே ஒரு ஜதை மாற்று உடுப்புகள். அவர் உடமைகள் அவ்வளவுதான். இறுதிமூச்சு வரைக்கும் அவ்விதமாகவே எளிமையாக வாழ்ந்து மறைந்தார் திரு.வி.க.

***

திரு.வி.க. என்று அழைக்கப்படுகிற கலியாணசுந்தரம் திருவாரூரைச் சேர்ந்த விருத்தாசல முதலியார் – கனகம்மாள் இணையருக்கு ஆறாவது குழந்தையாக 26.08.1883 அன்று பிறந்தார். 1917இல் நடைபெற்ற ரஷ்யப்புரட்சியின் விளைவாக தொழிற்சங்க ஈடுபாடும் திலகர் வழியில் இந்திய சுதந்திரப்போராட்ட ஈடுபாடும் அவரிடம் குடிகொண்டிருந்தன. பள்ளிப்படிப்பை மட்டுமே முடித்திருந்த போதும் சொந்த ஆர்வத்தின் காரணமாக பல அறிஞர்கள் வழியாக தமிழிலக்கியங்களைக் கற்றுத் தேர்ந்தார். தமிழகத்தில் இந்திய தேசிய காங்கிரஸ் வேரூன்ற பாடுபட்ட மூத்த தலைமுறையைச் சார்ந்த தலைவர்களில் ஒருவர். இந்தியாவில் முதல்முதலாக சென்னையில் தொழிலாளர் இயக்கத்தை திரு.வி.க.வே முன்னின்று உருவாக்கினார். தேசபக்தன், நவசக்தி ஆகிய இதழ்கள் வழியாக தீண்டாமை ஒழிப்பு, விதவைத்திருமணம், கலப்புத்திருமணம்

ஆகியவற்றுக்காகப் பாடுபட்ட முன்னோடிச் சிந்தனையாளர். தனித்துவம் வாய்ந்த அவருடைய தமிழ்நடையின் காரணமாக அவரைத் தமிழுலகம் 'தமிழ்த்தென்றல்' என்ற பட்டப்பெயருடன் அழைத்து மகிழ்ந்தது. சமூகம், அரசியல், சமயம் வாழ்க்கை வரலாறு என பல்வேறு துறை சார்ந்து நூற்றுக்கும் மேற்பட்ட புத்தகங்களை எழுதினார். திரு.வி.க. தனித்தமிழ் சார்ந்தும் ஆர்வமுள்ளவராக இருந்தார். அவருடைய வாழ்க்கை வரலாற்றை மு.வரதராசனார், ம.ரா.போ.குருசாமி, சக்திதாசன் சுப்பிரமணியம் ஆகிய மூவரும் எழுதியுள்ளனர். நீரிழிவு நோயின் காரணமாக திரு.வி.க. 17.09.1953 அன்று மறைந்தார்.

திரு.வி.க-வின் சிறப்புகள்

திரு.வி.க (திருவாரூர் விருத்தாசலம் கல்யாணசுந்தரம்) ஒரு சிறந்த தமிழறிஞர், மேடைப் பேச்சாளர், இதழாளர் மற்றும் தொழிற்சங்க முன்னோடி ஆவார். இனிய தமிழ்நடைக்காக 'தமிழ்த் தென்றல்' என அழைக்கப்பட்ட இவர், தமிழ் மறுமலர்ச்சி, சமயம், சமரசம், அரசியல் எனப் பல துறைகளில் ஆழமான பங்களிப்பை வழங்கிய, நவீன தமிழ் உரைநடையின் தந்தையாக போற்றப்படுபவர்.

திரு.வி.க-வின் சிறப்புகள்:

- **தமிழ்த் தென்றல்:** இனிய மற்றும் தெளிவான தமிழ் உரைநடைக்காகப் போற்றப்பட்டதால், திரு.வி.க, 'தமிழ்த் தென்றல்' என்று அன்போடு அழைக்கப்பட்டார்.

- **பன்முகத்திறன்:** சிறந்த மேடைப் பேச்சாளர், கட்டுரையாளர், பத்திரிகையாளர், தொழிற்சங்கவாதி எனப் பன்முகம் கொண்டவர். தேசபக்தன், நவசக்தி ஆகிய பத்திரிகைகளின் ஆசிரியராகப் பணியாற்றியவர்

- **தொழிலாளர் தந்தை:** இந்தியாவின் தொழிற்சங்க இயக்கத்தின் முன்னோடிகளில் ஒருவராகத் திகழ்ந்து, தொழிலாளர்களின் உரிமைக்காகக் குரல் கொடுத்தார்.

- **மறுமலர்ச்சி ஆளுமை:** தமிழ், சமயம், சமுதாயம் மற்றும் அரசியல் துறைகளில் மறுமலர்ச்சியை ஏற்படுத்தியவர்.

- **எழுத்துப் பணி:** மனித வாழ்க்கையும் காந்தியடிகளும், பெண்ணின் பெருமை, முருகன் அல்லது அழகு, பொதுமை வேட்டல்,

தமிழ்ச்சோலை, தமிழ் தென்றல், நாயன்மார் வரலாறு, இருளில் ஒளி, பொருளும் அருளும் உள்ளிட்ட பல நூல்களை இயற்றியவர்.

- **சிறப்புப் பெயர்கள்:** தமிழ் முனிவர், தமிழ் பெரியார், தமிழ்ச்சோலை, தமிழ் புதிய உரைநடையின் தந்தை, தமிழ் மேடைப்பேச்சின் தந்தை, தொழிலாளர் தந்தை எனப் பல சிறப்புப் பெயர்களால் அழைக்கப்பட்டவர்.
- **விருது:** இவரின் நினைவாகத் தமிழ்நாடு அரசு, ஆண்டுதோறும் சிறந்த தமிழ் எழுத்தாளர்களுக்கு 'திரு. வி. க. விருது' வழங்கி கௌரவிக்கிறது.

செங்கற்பட்டு மாவட்டம் துள்ளம் (தற்போது தண்டலம்) என்ற ஊரில் 1883-ஆம் ஆண்டு பிறந்த இவர், தமிழ்ச் சமுதாயத்தின் அச்சு அசலான மூலமுதல் சிந்தனையாளர்களில் ஒருவராக மதிப்பிடப்படுகிறார்.

தமிழ் வளர்ச்சித் துறை

திரு.வி.க.விருது

https://brightzoom.blogspot.com/2018/02/blog-post_41.html

https://tamil.wiki/wiki/%E0%AE%A4%E0%AE%BF%E0%AE%B0%E0%AF%81.%E0%AE%B5%E0%AE%BF.%E0%AE%95._%E0%AE%B5%E0%AE%BF%E0%AE%B0%E0%AF%81%E0%AE%A4%E0%AF%81



திரு. வி. க. விருது, தமிழின் சிறந்த எழுத்தாளர் ஒருவருக்கு, திரு. வி. கலியாணசுந்தர முதலியாரின் நினைவாக, 1979 முதல் ஆண்டுதோறும் வழங்கப்பட்டு வருகிறது. தமிழக அரசின் தமிழ் வளர்ச்சித் துறை இந்த விருதினை வழங்குகிறது.

தமிழ்த்தென்றல் திரு.வி.க விருது வழங்கும் திட்டம் 1979-ஆம் ஆண்டில் தோற்றுவிக்கப் பட்டது. இத்திட்டத்தின்படி ஆண்டு தோறும் சிறந்த தமிழ் எழுத்தாளர் ஒருவரைத் தேர்வு செய்து விருது வழங்கப் பட்டு வருகிறது.

திரு.வி. க. விருது

தமிழின் சிறந்த எழுத்தாளர் ஒருவருக்கு, திரு. வி. கலியாண சுந்தர முதலியாரின் நினைவாக, 1979 முதல் ஆண்டுதோறும் இவ்விருது வழங்கப்பட்டு வருகிறது. தமிழக அரசின் தமிழ் வளர்ச்சித் துறை இந்த விருதினை வழங்குகிறது. இரண்டு லட்ச ரூபாய் பரிசுத் தொகையும், தங்கப்பதக்கமும், தகுதிச்சான்றும், பொன்னாடையும் கொண்டது இவ்விருது.

திரு. வி. க. விருது பெற்றோர் பட்டியல் (2022 வரை)


எண்	ஆண்டு	விருதாளர்
1	1979	ஜெகசிற்பியன்
2	1980	நாரண துரைக்கண்ணன்
3	1981	அ.கி. பரந்தாமனார்
4	1982	திருக்குறளார் வீ.முனிசாமி
5	1983	பன்மொழிப்புலவர் கா.அப்பாத்துரை
6	1984	கோ.வி. மணிசேகரன்
7	1985	டாக்டர் க.த. திருநாவுக்கரசு
8	1986	கவிஞர் கா.மு. ஷெரீப்
9	**1987**	டாக்டர் ந. சுப்புரெட்டியார்
10	1988	மணவை முஸ்தபா
11	1989	டாக்டர் தமிழண்ணல்
12	1990	புலவர் கா.கோவிந்தன் மற்றும் பேராசிரியர் அ.ச.ஞானசம்பந்தன்
13	1991	ராஜம் கிருஷ்ணன்
14	1992	அ.மு. பரமசிவானந்தம்
15	1993	முனைவர் தி. முத்து கண்ணப்பர்
16	1994	புலவர் இரா. இளங்குமரனார்

17	1995	பேராசிரியர் கா.பொ. இரத்தினம்
18	1996	பேராசிரியர் மா. நன்னன்
19	1997	மா.சு. சம்பந்தன்
20	1998	புலவர் மருதவாணன்
21	1999	கவிஞர் மன்னர்மன்னன் (புதுச்சேரி)
22	2000	பேரா.கா. சிவத்தம்பி (யாழ்ப்பாணம்)
23	2001	முனைவர் ப. இராமன்
24	2002	பேராசிரியர் தி.வே. கோபாலய்யர்
25	2003	முனைவர் ம.ரா.போ. குருசாமி
26	2004	முனைவர் ச. அகத்தியலிங்கம்
27	2005	விருது வழங்கப்படவில்லை
28	2006	க. திருநாவுக்கரசு
29	2007	முனைவர் த. பெரியாண்டவன்
30	2008	முனைவர் ச.பா. அருளானந்தம்
31	2009	இமையம் அண்ணாமலை
32	2010	பேரா. அ. அய்யாசாமி
33	2011	முனைவர் நா. ஜெயப்பிரகாசு
34	2012	முனைவர் பிரேமா நந்தகுமார்
35	2013	அசோகமித்திரன்
36	2014	முனைவர் கரு. நாகராசன்
37	2015	கி. வைத்தியநாதன்
38	2016	முனைவர் மறைமலை இலக்குவனார்
39	2017	பாலகுமாரன்
40	2018	முனைவர் கு. கணேசன்
41	2019	முனைவர் சே. சுந்தரராசன்

42	2020	வி.என். சாமி
43	2021	கயல்விழி தினகரன்
44	2022	பொ. வேல்சாமி
45	2023	பேராசிரியர் ஜெயசீல ஸ்டீபன்

உள்ளொளி

https://archive.org/details/dli.jZY9lup2kZl6TuXGlZQdjZp9kJQy.TVA_BOK_0006807




திரு. வி. கலியாணசுந்தரனார் (திரு.வி.க) எழுதிய "உள்ளொளி" ஒரு மிகச்சிறந்த கட்டுரை நூல். இதில் ஆன்மிகம், வாழ்க்கை நெறிமுறைகள், சமூக சீர்திருத்தம் மற்றும் தமிழ் மொழி சார்ந்த ஆழ்ந்த சிந்தனைகளை அவர் தனது இனிய உரைநடையில் வழங்கியுள்ளார். மனிதனின் உள்ளத்தில் தோன்றும் ஞான ஒளியை மையமாகக் கொண்டு, உயர்ந்த ஒழுக்க வாழ்வை வலியுறுத்தும் நூல் இதுவாகும்.

- **படைப்பாளி:** திரு. வி. க (திருவாரூர் விருத்தாசலம் கலியாணசுந்தரனார்).
- **வகை:** கட்டுரை நூல் (ஆன்மீகம், தத்துவம், வாழ்வியல்).
- **முக்கிய அம்சம்:** உள்ளொளியைப் பெருக்குதல், மனத் தூய்மை, சமய நல்லிணக்கம், மற்றும் தேசப்பற்று போன்றவை இதில் வலியுறுத்தப்பட்டுள்ளன.

- **சிறப்பு:** இது தமிழ் வாசகர்களுக்கு மிகச்சிறந்த ஞானக் கருத்துக்களைத் தெளிவாக எடுத்துரைக்கும் ஒரு சிறந்த கட்டுரைத் தொகுப்பாகக் கருதப்படுகிறது.

திரு.வி.கவின் மற்றுமொரு புகழ்பெற்ற படைப்பான "**ஆலமும் அமுதமும்**" போலவே, இந்த நூலும் அவர் காலத்தில் மிகவும் அறியப்பட்ட ஒன்றாகும்.

ஆலமும் அமுதமும்



ஆலமும் அமுதமும் என்பது திரு. வி. கலியாணசுந்தரனார் (திரு.வி.க) எழுதிய சைவ சித்தாந்தம் சார்ந்த ஒரு கட்டுரை நூல் ஆகும். 1943-ல் மதுரையில் ஆற்றிய உரை, 1944-ல் நூலாக வெளியிடப்பட்டது. இதில், ஆலம் (விஷம்) ஒடுங்கி, அமுதம் (அருள்/சிவம்) ஓங்க வேண்டும் என்ற ஆன்மீகக் கொள்கை, ஆலம்-அமுதம் இரண்டையும் சிவமயமாகக் காணும் பார்வை விளக்கப்பட்டுள்ளது.

- **ஆசிரியர்:** திரு. வி. கலியாணசுந்தரனார்
- **பொருள்:** சைவ சித்தாந்தம், ஆன்மீகம், சமூக சிந்தனை
- **பதிப்பு:** 1944 (முதற்பதிப்பு), 1970 (அரசி புக் டிப்போ)
- **கருத்து:** உலக வாழ்வில் உள்ள நச்சுத்தன்மைகளை (ஆலம் - தீய குணங்கள், அறியாமை) நீக்கி, அருள் என்னும் அமுதத்தைப் பருகி சிவனை அடைவது

இந்த நூல், வாழ்வின் துன்பங்களை (ஆலம்) கடந்து இன்பங்களை (அமுதம்) உணர்வதற்கான தத்துவத்தை, ஆழ்ந்த சைவப் பார்வையில் விவரிக்கிறது.

முக்கிய நூல்களின் வகைப்பாடு

திரு.வி.க (திருவாரூர் விருத்தாசலம் கலியாணசுந்தரனார்) அரசியல், சமயம், சமூகம் மற்றும் தமிழ் இலக்கியம் எனப் பல துறைகளிலும் சுமார் 55-க்கும் மேற்பட்ட நூல்களை எழுதியுள்ளார். அவரது குறிப்பிடத்தக்க படைப்புகளான **பெண்ணின் பெருமை**, **மனித வாழ்க்கையும் காந்தியடிகளும்**, **முருகன் அல்லது அழகு**, **பொதுமை வேட்டல்** மற்றும் **இளமை விருந்து** போன்றவை மிகவும் புகழ்பெற்றவை. அவர் எழுதிய முக்கிய நூல்களின் வகைப்பாடு பின்வருமாறு:

சமூக மற்றும் சீர்திருத்த நூல்கள்

- பெண்ணின் பெருமை அல்லது வாழ்க்கைத்துணை (1927)
- சீர்திருத்தம் அல்லது இளமை விருந்து
- மனித வாழ்க்கையும் காந்தியடிகளும் (1921)
- இந்து தேசமும் கிறிஸ்துவமும்
- வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம்

சமய மற்றும் தத்துவ நூல்கள்

- முருகன் அல்லது அழகு (1927)
- திருமால் அருள் வேட்டல்
- நாயன்மார் வரலாறு (1937)
- பொதுமை வேட்டல் (1942)
- சைவத் திறவு
- உள்ளொளி (1942)
- சமயக் கலை

உரைநடை மற்றும் சுயசரிதை

- திரு.வி.க. வாழ்க்கைக் குறிப்புகள் 1 & 2 (1944)
- கலைமகள் கண்ணீர்
- தமிழ்நாடும் மொழியும்

கவிதை/செய்யுள் நூல்கள்


- உரிமை வேட்கை அல்லது நாட்டுப் பாடல்
- முருகன் அருள் வேட்டல்
- இந்தியாவும் விடுதலையும்

1907-ம் ஆண்டு முதல் 1953 வரை இடையறாது தமிழ் தாய்க்குச் சேவையாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

மனித வாழ்க்கையும் காந்தியடிகளும்

01] https://archive.org/details/dli.jZY9lup2kZl6TuXGlZQdjZU3l0Qy

02] https://www.tamilheritage.org/old/text/ebook/manida.pdf



மகாத்மா காந்தியடிகளின் வாழ்க்கை உண்மை, அகிம்சை, எளிமை மற்றும் அன்பை அடிப்படையாகக் கொண்டது. "எனது வாழ்க்கையே என் செய்தி" என்று கூறிய அவர், சொல்லுக்கும் செயலுக்கும் வித்தியாசமில்லாமல் வாழ்ந்து காட்டி, உலகிற்கு அறவழிப் போராட்டத்தை (சத்தியாகிரகம்) கற்றுத்தந்த மிகச்சிறந்த முன்மாதிரி மனிதர். சமத்துவம், சுதேசி மற்றும் சுயக்கட்டுப்பாடு மூலம் மானுட மேம்பாட்டிற்கு அவர் வாழ்நாள் முழுவதும் பாடுபட்டார்.

காந்தியடிகளின் வாழ்க்கையின் முக்கிய அம்சங்கள்:

- **அகிம்சை மற்றும் சத்தியாகிரகம்:** தீங்கிழைக்காத அகிம்சையை வலிமையான ஆயுதமாகக் கருதி, வன்முறையற்ற போராட்டங்கள் மூலம் இந்திய விடுதலைக்கு வழிவகுத்தார்.
- **உண்மை (சத்தியம்):** காந்தி தனது வாழ்வில் உண்மையை கடைப்பிடிப்பதில் உறுதியாக இருந்தார், அதுவே அவரது வலிமையாக இருந்தது

.

- **எளிமை மற்றும் தற்சார்பு:** ஆடம்பரமற்ற வாழ்க்கை, கதர் ஆடை அணிதல் மற்றும் உடல் உழைப்பை மதித்தல் (சர்வோதயா) ஆகியவற்றைப் பின்பற்றினார்.

- **சமத்துவம்:** சாதி, மத, இன, கல்வி வேறுபாடுகளைக் கடந்து மனிதர்களைச் சமமாக நேசித்தார்.
- **பகைவர் அன்பு:** எதிரிகளையும் நேசிக்கக் கற்றுக்கொடுத்த அவர், தன் மீதான விமர்சனங்களையும் அன்பால் எதிர்கொண்டார்.

காந்தியடிகளின் வாழ்க்கை முறை, இன்றும் அரசியல் மற்றும் சமூக ஒழுக்கத்திற்கான பாடமாக, மனிதகுலத்திற்குப் பொன்வழிகாட்டியாகத் திகழ்கிறது.

திரு.வி.க.வின் உரைநடை அழகு

https://ta.wikisource.org/wiki/%E0%AE%95%E0%AE%B0%E0%AF%81%E0%AE%A4%E0%AF%8D%E0%AE%A4%E0%AF%81%E0%AE%95%E0%AF%8D_%E0%AE%95%E0%AE%A3%E0%AF%8D%E0%AE%95%E0%AE%BE%E0%AE%9F%E0%AF%8D%E0%AE%9A%E0%AE%BF/%E0%AE%A4%E0%AE%BF%E0%AE%B0%E0%AF%81.%E0%AE%B5%E0%AE%BF.%E0%AE%95._%E0%AE%B5%E0%AE%BF%E0%AE%A9%E0%AF%8D_%E0%AE%89%E0%AE%B0%E0%AF%88%E0%AE%A8%E0%AE%9F%E0%AF%88_%E0%AE%85%E0%AE%B4%E0%AE%95%E0%AF%81

@@@@@@@@@@@@

அழகு என்பது பார்த்து மகிழக் கூடியது என்றே பலரும் கருதுவர். மக்களின் நடையழகைப் பார்த்து மகிழ்வதுண்டு. பெண்டிரின் நடையை 'அன்ன நடை' என்றும் அவர்தம் நடையின் சாயலை 'மயிலின் சாயல்' என்றும் புலவர்கள் புனைந்து கூறுவர். ஆடவரின் பெருமித நடையை 'ஏறுபோல் பீடு நடை' என்று வள்ளுவனார் குறிப்பிட்டுள்ளார். அதாவது, சிங்க நடை போன்ற

பெருமித நடையாம். இந்நிலையில், உரைநடை அழகு என்றால் என்ன? உரைநடைக்கு அழகு அளிப்பது எது? என்பதற்குத் தீர்வு காணவேண்டும்.

உரைநடை அழகு கண்ணால் கண்டு மகிழக் கூடியது அன்று ஒலியுறுப்புகளால் வாய்விட்டுப் படித்துச் சுவைக்கக் கூடியது; காதால் கேட்டுச் சுவைக்கக் கூடியது. ஒலி எழுப்பாமல் வாய்க்குள் படித்தும் நுணுக்கமாக மனக்கண்ணால் கண்டும் சுவைக்கலாம். இவ்வாறு உரைநடையைச் சுவைக்க உதவும் கூறுகள் யாவை?

அழகுக் கூறுகள்:

உரைநடையில் உணர்த்தப்படும் கருத்தும் சிறந்ததாய் இருக்க வேண்டும்; உரைநடையில் அமைந்துள்ள சொற்களும் சொற்றொடர்களும் 'இழும்' என்னும் விழுமிய ஒலியுடையனவாய்ச் செவிக்கு இனிமை பயக்கவேண்டும். அதாவது, உரைநடையைப் படித்தால் ஒலிநயம்-ரிதம்(Rhythm) இருக்க வேண்டும். செய்யுளில் ஒலி நயம் இருப்பது

போலவே, சிறந்த ஆசிரியர்களின் உரைநடையிலும் ஒலிநயம் இருக்கும். எடுத்துக்காட்டாக, இளங்கோவடிகளின் சிலப்பதிகாரத்தின் இடையிடையே உள்ள உரை நடைப் பகுதியைக் குறிப்பிடலாம். ஒலி நயம் உடைய உரைநடைப் பகுதி ‘உரைநடைப் பாட்டு’ என்று கூறப்படுவதும் உண்டு.

தமிழ் உரைநடையின் தொன்மை:

தொல்காப்பியக் காலத்துக்கு முன்பே தமிழில் உரை நடை நூல்கள் இருந்தன. தொல்காப்பியத்தில் நான்கு வகையான உரைநடை நூல்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. நாளடைவில் செய்யுள் நடையின் சிறப்பு பெருகப்

பெருக, உரைநடை நூல்கள் அருகத் தொடங்கின. உரையாசிரியர்களின் உரையளவில் உரைநடை கண்ணை மூஞ்சைக் காட்டிக் கொண்டிருந்தது.பிற்காலத்தில், வீரமா முனிவர், ஆறுமுகநாவலர், முதலியோர் தமிழில் உரை நடை நூல்கள் எழுதத் தொடங்கினர். பின்னர், மீண்டும் தமிழில் உரைநடை நூல்கள் பெருகத் தொடங்கின. இப்போது உரைநடைநூல்களும் இலக்கியமாகக் கருதக்கூடிய அளவில் தமிழில் உரைநடை பெரிதும் அழகுபெற்றுள்ளது.

தமிழில் (திரு.வி.க.) திரு.வி.கலியாணசுந்தரனார், மறை மலை அடிகளார், சோமசுந்தர பாரதியார்,ந.மு. வேங்கடசாமி நாட்டார், மு. வரதராசனார் முதலியோரின் உரைநடை நூல்கள் மிகவும் சிறந்தனவாகும். - ஒவ்வொருவருடைய உரைநடையிலும் ஒவ்வொரு வித அழகைக் காணலாம். உலகில் கோடிக் கணக்கான மக்கள் உளர். ஒவ்வொருவரது முகமும் ஒவ்வொரு விதமாய் இருக்கும். ஒவ்வொருவருடைய குரலும் ஒவ்வாரு மாதிரியாயிருக்கும். ஆளைப் பார்க்காமல் குரலைக் கொண்டே இன்னாரென்று கூறிவிடலாம். வானொலியில் நடைபெறும் இசை நிகழ்ச்சிகளைத் திடீரெனக் கேட்கத் தொடங்கிய வல்லுநர் சிலர், பாடுபவர் இன்னார்-மிருதங்கம் அடிப்பவர் இன்னார் -பிடில் வாசிப்பவர் இன்னார்-கடம் அடிப்பவர் இன்னார் - என்று கூறுவது உண்டு. வானொலியில் முதலில் பெயர் அறிவிக்கும்போது கேளாமல், இடையில் நாதசுரம் கேட்ட அளவிலேயே இது காரு குறிச்சி அருணாசலத்தின் வாசிப்பு என்று கூறும் திறமையாளர்கள் உண்டு. இதை மட்டும் என்னாலும் கூற முடியும்.

இது போலவே, பெயர் கூறாமல் படித்துக் காட்டினாலேயே, இது திரு.வி.க. வின் உரைநடை, இது மறைமலை யடிகளின் உரைநடை என்று கூற முடியும். இப்பெரியார்களின் உரைநடைகள் இத்தகைய சிறப்பு முத்திரை பெற்றனவாகும். இனி, திரு.வி.க. அவர்களின் உரைநடையைச் சிறப்பாக நோக்குவோம்:

அண்மைக் காலத்தில் அறிஞர் அண்ணாதுரையின் சொற்பொழிவைக் கேட்கப் பெருங் கூட்டம் கூடுவதைப் பார்த்திருக்கிறோம். அறிஞர் அண்ணாதுரை தலையெடுப்பதற்கு முன், திரு.வி.க.வின் பேச்சைக் கேட்கப் பெருங் கூட்டம் கூடுவதுண்டு. திரு.வி.க. வின் பேச்சு தனிச்சிறப்பு வாய்ந்தது. அதுபோலவே அவரது எழுத்தும் தனிப் பெருமை உடையது. அழகான எழுத்துநடை என்பது, ஒழுங்கான பேச்சுநடையின் விளைவே என்று 'கிரீனிங்'(Greening) என்ற அறிஞர் கூறியுள்ளார். இதைத் தான் சித்திரமும் கைப்பழக்கம் செந்தமிழும் நாப் பழக்கம் என்று ஔவையார் குறிப்பிட்டுள்ளார். எனவே, சிறந்த பேச்சாளராகத் திகழ்ந்த திரு.வி.க. அவர்கள், சிறந்த எழுத்தாளராகவும் விளங்கியதில் வியப்பில்லை. திரு.வி.க. வின் உரைநடைக்கு அழகு அளிப்பனவாகப்பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்

புதிய கருத்துகள்-புரட்சிக் கருத்துகள்-பழமையிலும் புதுமை காணும் கருத்துகள்-வாழ்க்கைக்குத் தேவையான கருத்துகள்-உடனடியாக நேர்ப்பயன் அளிக்கும் கருத்துகள்ஆகியவை அடங்கியிருப்பது, அவரது உரைநடைக்கு ஒரு வகையில் அழகு தருகின்றது. மற்றும், முற்றுப்புள்ளியிட்ட சிறுசிறு வாக்கியங்களும் அரைப் புள்ளியிட்ட தொடர்வாக்கியங்களும் அமந்திருப்பது-ஒருசொல்லையே திரும்பத் திரும்ப இருமுறை மும்முறை கூறும் அழுத்தம் உடைமை-பலர்க்குக் கைவராத சிறந்த மிகவும் இனிய சொற்களும் சொற்றொடர்களும் வலிந்து தேடாமல் இயற்கையாக முன்வந்தமைவது-ஆகியனவும் இன்ன பிறவும்.

அவரது உரைநடைக்கு அழகு தருவனவாம். அவருடைய நீண்ட வாக்கியங்களிலும் இனிமை ததும்பித் தவழும்.

இத்தகைய அழகுகள் பொருந்தத் திரு.வி.க. பல துறை நூல்கள் எழுதியுள்ளார். அவற்றுள் சில வருமாறு:தமிழ்ச்சோலை, தமிழ்த்தென்றல், இளமைவிருந்து, முடியா -காதலா-சீர் திருத்தமா?, இந்தியாவும் விடுதலையும் முருகன் அல்லது அழகு, மனித வாழ்க்கையும் காந்தியடிகளும், பெண்ணின் பெருமை, வாழ்க்கைவழி, உள்ளொளி, இராமலிங்க சுவாமிகள் திருவுள்ளம், சைவத்தின் சமரசம், சைவத் திறவு, சன்மார்க்க போதமும் திறவும், சமரச் சன்மார்க்கத் திறவு, தமிழ்நாடும் நம்மாழ்வாரும், இமயமலை அல்லது தியானம், கடவுள் காட்சியும் தாயுமானாரும், சித்த மார்க்கம், தமிழ் நூல்களில் பௌத்தம், நினைப்பவர் மனம், சைவ சமய சாரம், இருமையும் ஒருமையும்,அருகன் அருகே,மார்க்சியமும் காந்தியமும், இருளில் ஒளி,செத்துப் பிறத்தல், முதுமை உளறல்,வளர்ச்சியும் வாழ்வும்-முதலியன திரு.வி.க.வின் உரைநடை நூல்களாகும்.

இந்நூல்களேயன்றிப் பெரிய புராணத்திற்கும் காரைக்கால் அம்மையார் திருமுறைக்கும் குறிப்புரை எழுதியுள்ளார். திருக்குறளின் முதல் பத்து அதிகாரங்கட்கு விரிவுரை எழுதியுள்ளார். இவையேயன்றி, ‘தேச பக்தன்’ என்னும் செய்தித்தாளும், ‘நவசக்தி’ என்னும் வார இதழும் நடத்தியுள்ளார். திரு.வி.க. எழுதியுள்ள தனிக் கட்டுரைகட்கு அளவேயில்லை. செய்யுள் நூல்கள் சிலவும் இவர் இயற்றியுள்ளார்.

திரைப்பட நடிகர்களுள் சிலரது நடிப்பில் சிலர் மிகவும் ஈடுபாடு கொள்வதுண்டு. அதேபோன்று எழுத்தாளர்களுள் சிலருடைய நூல்களைச் சிலர் விரும்பிப் படிப்பதுண்டு . திரு.க.வின் நூல்களை மிகவும் விரும்பிப் படித்தவர்களுள் ஒருவரைச் சிறப்பாக இங்கே குறிப்பிட விரும்புகிறேன். புதுச்சேரிப் பெத்தி செமினர் உயர்நிலைப் பள்ளியில் பல்லாண்டுகள் தலைமையாசிரியராகப் பணியாற்றிய சுவாமிக்கண்ணு என்னும் அடிகளார். திரு.வி.க. வின் நூல்களில் பெரிதும் ஈடுபாடு கொண்டிருந்தார். இருவரும் மதத்தாலும்வேறுசிலவற்றாலும்வேறுபட்டவர்கள்.இருப்பினும், சுவாமிக் கண்ணு அடிகளார், திரு.வி.க.வின் நூல்களைத் தேடிக்கொண்டுவந்து தரும்படிஎன்னைக் கேட்டு வாங்கிச் சுவைத்துப் படிப்பார்; அவரது நடையழகின் இனிமையை அடிக்கடி என்னிடம் எடுத்துச் சொல்லுவார்; சில பகுதிகளைப் படித்தும் காட்டுவார். பின்னர், திரு.வி.க.வின் நூல்கள் சிலவற்றை விலைக்கு வாங்கிக் கொண்டு படித்து இனிமை கண்டார்.

இத்தகைய சிறப்பு வாய்ந்த திரு.வி.க.வின் உரைநடை அழகுக்குச் சில எடுத்துக்காட்டுகள் தரவேண்டும் அல்லவா? ஒவ்வொரு நூல் வாரியாகத் தருவது என்பது இயலாத செயல்-இடம் போதாது. எனவே, பொதுவாக அவர் நூல்களிலிருந்து சில பகுதிகள் வருமாறு:

திரு.வி.க.வின் வாழ்நாளிலே, திருப்பாதிரிப் புலியூரில் “ஞானியார் சுவாமிகள் என்பவர், திருக்கோவலூர்-திருப் பாதிரிப் புலியூர் ஆதீனத்து ஐந்தாம் பட்டத்து அடிகளாராய் வீற்றிருந்தார். அவர் பெரிய கல்விக்கடல். வேறு எவர் காலிலும் விழாத திரு.வி.க. உட்படப் பலர் அவர் காலில் விழுந்து வணங்குவர். அப்பெரியாரைப் புகழ்ந்து திரு.வி.க. எழுதியுள்ள உரைநடை அழகுக்குச் சான்றாக ஒரு சிறு பகுதி வருமாறு: -

‘முருகன் சேவடி வருடி உருகும் ஈரநெஞ்சும், அவன் புகழ் பேசி இனிக்கும் நன்னாவும், தண்மை பொழியும் செவ்விய நோக்கும், வெண்ணிறு துதையும் நெற்றியும், மாணிக்கக் குழை பிறங்கும் செவியும், பொன்னொளிரும் மணிமார்பும், கருமைக் கதிர் விரிக்கும் திரு மேனியும், சண்முகா-சண்முகா என்று கூறி நீறளிக்கும் நீண்ட கையும் கொண்ட அடிகளின் திருவோலக்கப் பொலிவு என் உள்ளத்தில் ஒவியம் எனப் படிந்து நிற்கிறது ...... அடிகளாரின் பேச்சுத் திறனை எதற்கு ஒப்பிடுவது? கடல் மடைத் திறப்புக்கா?

வெண்கலக் கோட்டைக்குள் அரகவா (பட்டத்து யானை) புகுதலுக்கா? பெரும் புயலுக்கா? ஓயா மழைக்கா? எதற்கு-எதற்கு ஒப்பிடுவது?... ...”

“அடிகள் கருமை பூத்த ஒரு பொறுமை மலை. அம்மலையின் உச்சியில் - அதாவது மூளையில் -கலை மேகங்கள் பொழிந்த அறிவு மழைநீர், தேங்கித் தேங்கிப் புரண்டு திரண்டு பன்முகங் கொண்டெழுந்து முட்டி முடுகி, வாயின் வழியே முழங்கி விரைந்து இடையீடு இல்லாச் சொற்றொடர் அருவியாக இழிந்து, பலதிறச் சுவை நுட்பப் பொருள்கள் மிதந்து சுழல, அன்பு வெள்ளப் பெருக்காய்ப் பரவிப் பரந்து அருள் அலை கொழித்துக் கொழித்து ஓடும்”......

திரு.வி.க.வின் சொல்நயம் பொருள் நயம் பொதிந்த உரை நடை அழகுக்கு இது போதாதா?இன்னும் சுவைக்க வேண்டுமா? சரி-இதோ தருகிறேன். திரு.வி.க.வின் இயற்கைப் புனைவு ஒன்றினைக் காண்போம். அவர் ஒரு சமயம் இலங்கையில் புகைவண்டியில் பயணம் செய்து கொண்டிருந்தபோது வழியில் கண்ட இயற்கைக் காட்சிகளைப் புனைவு செய்து எழுதியுள்ளார். ஒரு சிறு பகுதி வருமாறு: “வழி நெடுகப் பசுமை உமிழும் மலைகளின் செறிவும் சூழலும் நிரையும் அணியும் உள்ளத்தைக் கவர்கின்றன. முகிற் குழாங்கள் கொண்டல் கொண்டலாக அசைந்தும் ‘ஆடியும் ஓடியும் மலைமுகடுகளிற் சூழ்ந்து தவழ்ந்து பாகைபோல் பொலியும் காட்சியும் அம்மலைகளின் உடல் புலனாகாதவாறு பசும்பட்டுப் போர்த்தாலெனப் பொழில்கள் துதைந்துள்ள அழகும் புலன்களை ஒன்றச் செய்கின்றன ...... புகைவண்டியின் விரைவில், இடையிடையே ஓடும் சிற்றருவிகளின் தோற்றம், பசிய வானில் மின்னொளி தோன்றி மறைவது போலப் புலப்படுகின்றது”.

இது நிற்க, சோழநாட்டின் இயற்கை வளத்தைப் பின்வருமாறு புனைவு செய்துள்ளார்:

‘வான்ப்பாய்ப்பினும் தான் பொய்யாக் காவிரி, பாட்டெனப் பரந்து, கிளை கிளையாய்ப் பிரிந்து, கால் காலாய் விரிந்து’ சோழ நாட்டை அணி செய்கிறது. காவிரிப் பயனைச் சோழ நாடு நுகருதலால், அது புனல் நாடாய்ச் சோறுடைத் தாயது போலும்”.

இந்தப் பகுதிகள் தமிழ்ச் சோலை முதலிய நூல்களில் காணக் கிடக்கின்றன. ‘முருகன் அல்லது அழகு என்னும் நூலில் அவர் இயற்கையைப் புனைவு செய்துள்ள உரைநடை அழகு ஒன்றினைக் காண்பாம்:

‘செம்பொன்னை உருக்கி வைத்தா லெனக் காட்சியளிக்கும் அந்தி வான் செக்கர் அழகும், கொண்டல் கொண்டலாக ஓடும் புயலின் அழகும், அது பொழியும் மழையின் அழகும், அத் தண் புனல் மணற் கற்களை அரித்தோடும் அருவியின் அழகும், பச்சைப் பசேலெனப்

பெருங்காட்சியளிக்கும் பொழில்களின் அழகும் அவற்றில் பச்சைப் பாம்பெனப் பின்னிக் கிடக்கும் பசுங் கொடிகளின் அழகும் அவற்றினின்றும் அரும்பியுள்ள நகைமலரின் அழ கும் மக்கள் உள்ளத்து உள்ள இன்ப ஊற்றைத் திறப்பன அல்லவோ? மயிலாடும் அழகும் மான் நடக்கும் அழகும் நந்தூரும் அழகும் புலவருக்கு விருந்தல்லவா?"

திரு.வி.க. பழமையில் புதுமையும் புதுமையில் பழமையும் காணும் இயல்பினர் என்பதை விளக்கும் உரை நடைப் பகுதி ஒன்றின் அழகினைக் காண்பாம்:

"ஆராய்ச்சித் துறை நண்ணாது, ஒன்றைப் பழைமை என்றதும் அதனைப் போற்றவோ தூற்றவோ புகுவதும் அவ்வாறே ஒன்றைப் புதுமை என்றதும் அதனைத் தூற்றவோ போற்றவோ புகுவதும் பகுத்தறிவுச் செயல் கள் ஆகா. பழைமையில் நல்லனவும் இருக்கலாம்; தீயனவும் இருக்கலாம். அங்ஙனமே புதுமையிலும் தீயனவும், இருக்கலாம்; நல்லனவும் இருக்கலாம். பழைமை புதுமை என்னும் அளவின் நின்று, ஒன்றைக் கொள்ளல் அல்லது தள்ளல் அறிவுடைமை ஆகாது. அதன் அதன் தன்மைகளை நன்கு ஆராய்ந்து உணர்ந்த பின்னரே தள்ளல் -கொள்ளல் விதிப்பது அறிவுடைமை".

அடுத்து, 'நவ சக்தி' என்னும் வார இதழில் 'கல்வி என்னும் பல்கடல் பிழைத்தும் என்னும் தலைப்பில் அவர் எழுதியுள்ள ஒரு பகுதி வருமாறு:-

“ஏட்டுக் கல்வியை ஒரளவு நிறுத்திக் கொண்டு, அதன் பொருளாயுள்ள இயற்கைக் கல்வியில் கருத்திருத்தப் பயில வேண்டும். இயற்கை பெரிய பல்கலைக்கழகம். அக் கழகத்திற் பயிலப் பயில அஃது இறைக் கல்வி யாகிய இன்பம் ஊட்டும். இறைக் கல்வி அழியாதது; அருளுடையது; அறியாமையைக் கல்லும் ஆற்றல் அதற்கே உண்டு. 'கல்லார் நெஞ்சில் நில்லான் ஈசன்' என்னும் திருவாக்கில் போந்துள்ள 'கல்லார்’ என்பது, இயற்கை இறைக் கல்வி பெறாதாரைக் குறிப்பதென்க. ‘கல்லாத பேர்களே நல்லவர்கள் நல்லவர்கள்’ என்னும் மெய்ம் மொழி, ஏட்டுக்கல்வி பயின்று தகாத செயல் செய்வோரை நோக்கி எழுந்ததென்க".

இனி, தமிழ்த் தென்றல் முதலிய நூல்களிலிருந்து சில பகுதிகளைக் காணலாம். தமிழைப் பற்றிக் கூறியிருப்பதாவது:

"நம் மக்கள் வாழ்வே தமிழ் வாழ்வு-அவர்கள் கண்டது தமிழ்; கேட்டது தமிழ்; உண்டது தமிழ்; உயிர்த்தது தமிழ்; உற்றது தமிழ்; அத்தமிழ் அமிழ்தம் கொண்டது இந்நாடு".

அடுத்துத் தொழில் துறையைப் பற்றிக் கூறியிருப்பதாவது: “ஆண்டவனே தொழிலாளியாயின், பின்னை எவன்தான் தொழிலாளியா யிருக்கமாட்டான்? தோட்டியும் தொழிலாளியே; தொண்டைமானும் தொழிலாளியே;

நியாயாதிபதியும் தொழிலாளியே; வாயில் காப்போனும் தொழிலாளியே; உலகில் உள்ள அனைவரும் தொழிலாளரேயாவர்".

பெண்ணுரிமை பற்றிய ஒரு பகுதி வருமாறு, "பெண்ணுக்கு உரிமை அருளிய என்னருமைத் தமிழ் நாடே! இது போழ்து யாண்டுளாய்-யாண்டுளாய் என்று அலமருகிறேன். அவ்வுரிமை நாட்டை மீண்டுங் காண எவர் முயலல் வேண்டும்? பெண் ஒரு பாதி; ஆண் மற்றொரு பாதி; இரண்டும் சேர்ந்த ஒன்றே முழு மனிதத் தன்மை. அங்ஙனமாக, வாழ்வின் ஒரு பாதி உரிமை கடிவது எத்தகை அறியாமை:" காந்தியடிகள் பற்றிச் சில சொற்கள்: "... ... இந்த சனநாயக உணர்வைக் கிளப்பியவர் யாவர்? மகாத்மாகாந்தி என்று மண்ணும் சொல்லும்; மரமும் சொல்லும்."

விடுதலை உரிமை பற்றிச் சில தொடர்கள்: "பிறப் புரிமை இன்பத்திற்கு மனைவி இன்பம் ஈடாகுமோ? மக்களின்பம் ஈடாகுமோ? அரச இன்பம் ஈடாகுமோ? உலகிலுள்ள எவ்வின்பம்தான் அதற்கு ஈடாகும்?"

இளைஞர்க்கு ஓர் அறிவுரை:

"... ... கிளர் ஈரலும் தடைபடாக் குருதியோட்டமும் எஃகு நரம்பும் ஏக்கழுத்தும் பீடு நடையும் உடையவர் களாக நீங்கள் திகழ்தல் வேண்டும்."


செல்வர்கட்குக் கூறியிருப்பதாவது:- "தமிழ்நாட்டுச் செல்வர்களே! நீங்கள் பிறந்த நாடு திருவள்ளுவர் பிறந்த நாடு. அப்பெரியார் நூல் உங்கள் கையில் விளங்குகிறது. அதுவே உங்களுக்கு உரிமை கொடுக்கும் கருவி. அதை ஓதுங்கள். அதன்படி ஒழுகுங்கள் ... ... "

திருக்குறள் பற்றிய கருத்தோடு திரு.வி.க. வின் உரைநடையை நிறுத்துவோம். மேலே திரு.வி.க. வின் உரைநடைப் பகுதிகள் பல தரப்பெற்றுள்ளன. உரை நடை அழகு சொற்களால் விளக்கக் கூடியது அன்று; ஒவ்வொருவரும் படித்தும் கேட்டும் உணர்ந்து சுவைக்க வேண்டிய ஒன்றாகும் அது.

இங்கே, திரு.வி.க.வின் உரைநடை அழகோடு பல தரப்பட்ட சிறந்த செய்திகளையும் தெரிந்து கொண்டோம் அல்லவா?

பெண்ணின் பெருமை

https://www.projectmadurai.org/pm_etexts/utf8/pmuni0786.html



பெண்ணின் பெருமை அல்லது வாழ்க்கைத்துணை - திரு. வி. கலியாணசுந்தரனார்

Pennin Perumai alladhu Vazhkai Thunai by Thiru V.K.Kalyanasundaram first published in 1927. முழுமுதற் பொருளைப் பெண் ஆண் என்றும், தாய் தந்தை என்றும் கொள்வதால், அதற்குத் திண்ணிய உறுப்புக்களுண்டு என்று எவருங் கருதலாகாது. அப்பொருளின் பெண்மையும் ஆண்மையும், திண்ணிய உறுப்புக்களையுடைய பெண் ஆண் வடிவங்களை உணர்த்துவன அல்ல. அவை நுண்ணிய சக்திகளை உணர்த்துவனவாம். புராணங்கள் அவைகளைத் திண்ணிய வடிவங்களாகக் கொண்டு திருமணப் படலங்களும் வகுத்திருக் கின்றன. அறிவால் கூர்ந்து உணரத்தக்க சில நுண்மைகள், மனத்திற் பொருளாகுமாறு அவற்றை உருவகப்படுத்திக் கதைகளாக அணிவகுத்துக் கூறுவது புராண மரபு. கதைகளை உள்ளவாறு நம்புவது பௌராணிக மதம். ஞான நூலாராய்ச்சியுடையார் புராணக் கதைகளின் நுட்பமுணர்ந்து இன்புறுவர்; ஏனையோர் இடர்ப்ப டுவர்.

பெண்ணின் பெருமை என்பது சகிப்புத்தன்மை, அன்பு, தியாகம், மற்றும் பல்துறை ஆற்றல் ஆகியவற்றின் சங்கமமாகும். சமூகத்தின் தூண்களாக விளங்கும் பெண்கள், குடும்பம் முதல் கல்வி, மருத்துவம், விளையாட்டு வரை அனைத்துத் துறைகளிலும் சாதனை படைத்து, சமத்துவமான சமூகம் உருவாகக் காரணமாகத் திகழ்கிறார்கள்.

பெண்ணின் பெருமை குறித்த முக்கிய அம்சங்கள்:

- **கலைஞர் & இலக்கியப் பார்வை:** திரு.வி.க (திரு.வி.கலியாணசுந்தரனார்) எழுதிய **'பெண்ணின் பெருமை அல்லது வாழ்க்கைத் துணை' (1927)** நூல் பெண்ணின் சிறப்பையும், சமூகத்தில் அவள் வகிக்கும் பாத்திரத்தையும் போற்றுகிறது.

- ***பண்புகள்:*** அடக்கம், பொறுமை, அன்பு, இரக்கம், மற்றும் குடும்பத்தைச் சீராக வழிநடத்தும் திறன் ஆகியவை பெண்ணின் முதன்மைப் பெருமைகளாகக் கருதப்படுகின்றன.
- ***சமூகப் பங்கு:***

  பெண்கள் வெறும் குடும்பத் தலைவிகளாக மட்டுமின்றி, சமூக, பொருளாதார வளர்ச்சியில் முக்கியப் பங்கு வகிக்கின்றனர்

  . மருத்துவம், விளையாட்டு, கலை போன்ற துறைகளில் சிறந்து விளங்குகிறார்கள்
- ***சாதனைகள்:*** விளையாட்டுப் போட்டிகள் (எ.கா: ஹாக்கி), கலை, மற்றும் சமூக சேவை போன்ற பல்வேறு துறைகளில் பெண்கள் தங்களின் திறமையை நிரூபித்து, நாட்டுக்குப் பெருமை சேர்க்கின்றனர்.
- **சமத்துவம்:** பெண்ணியம் என்பது பெண்களுக்கு மட்டும் சிறப்புரிமை கேட்பது அல்ல, மாறாக பாலின பாகுபாடற்ற சமத்துவமான, மனிதநேயம் மிக்க சமுதாயத்தைப் படைப்பதே ஆகும்.

பெண்ணைப் போற்றுவது என்பது ஒரு தலைமுறையைப் போற்றுவதாகும், ஏனெனில் பெண்மை என்பது வலிமை மற்றும் அறிவாற்றலின் அடையாளம்.

@@@@@@@@@@@@@

முன்னுரை



உலகம் பெண் ஆண் என்னும் இருபாலாலும் ஆக் கப்பட்டிருக்கிறது. இரண்டுஞ் சேர்ந்த ஒன்றே உலகம் என்பது. இவ்விரண்டும் ஒன்றி இயங்கினாலன்றி உலகம் நல்வழியில் நடைபெறாது. பெண் தாயாகலான், பெண்ணலன் பெரிதும் ஓம்பப் பெறல்வேண்டும். பெண்ணலன் ஓம்பப்படா விடத்தில் வேறு எவ்வித நலனும் நிலவல் அரிது. ஒரு நாட்டு நலன் அந்நாட்டுப் பெண்மக்கள் நிலையைப் பொறுத்து நிற்கிறது.

இந்நாளில் பெண்ணுலகில் பலதிறக் குறை பாடுகள் தோன்றியிருக்கின்றன. அவைகளுள் இரண்டு சிறப் பாகக் குறிக்கத்தக்கன. ஒன்று சிறிதும் நாகரிகமின் றிச் சில விடங்களில் பெண் இருளில் மூழ்கிக்கிடப் பது; மற்றொன்று "பழுத்த நாகரிகம்" என்னும் பேய்க்குச் சில விடங்களில் பெண் இரையாகி வாழ்வையே குலைத்துக்கொள்வது. இருசாராரும் ஒழுங்குப்பட்டுப் பெண்ணாய் உலகிற்குப் பயன்படல் வேண்டும்.

நமது நாட்டில் இடைக்காலத்தில் ஏற்பட்ட கட்டுப் பாடுகள் பெண்ணுலகின் பெருமைக்கே கேடு சூழ்ந்தன . அக்கட்டுப்பாடுகள் பெண்மக்களைக் கல்லாய் மண்ணாய் நடைப்பிணமாய்ச் செய்துவிட்டன. மேல் நாட்டில் இத்தகைக் கொடுங்கட்டுப்பாடுகள் இல்லையேனும், ஆண்டுப் " பழுத்த நாகரிகம்" என்னும் அலகை பெண் மையின் இறைமையைக் கவர்ந்து நிற்கிறது. அந்நாட்டுப் பெண்ணறிஞர் பலர் தாய்மைப்பேற்றை இழி வெனக்கருதி வாழ்தல் கண்கூடு. தாய்மை நிலவா விடத் தில் இறைமை எங்ஙனம் நிலவும்? இப் "பழுத்த நாக ரிகம் " உலகை வளர்க்குமா ? தேய்க்குமா?

இக்காலத்தில் பெண்மைக்கணுள்ள தாய்மையையும், தாய்மைக்கணுள்ள இறைமையையும் மக்கள் வாழ்வில் உணரத்தக்க துறைகள் காணப்பெறல்வேண்டும். அத் துறைகள் காண உலகில் முயற்சி துவங்கப்பட்டிரு கிறது.

மேல் நாட்டறிஞர் சிலர் பெண்மையைப்பற்றியும் தாய்மையைப்பற்றியும் அரிய நூல் பல எழுதி வருகிறார். அந்நூல்களின் உட்கிடக்கை பெரிதும் நமது நாட்டுப் பழைய அகப்பொருள் நூல்களின் உட்கிடக் கைக்கு அரண் செய்தல் கண்டு யான் கழிபேருவகை எய்தல் உண்டு. நன்மக்கள் எவராயினும், அவர் யாண்டு உறையினும், அவர் அறிவில் ஒரே கருத்து அரும்பல் இயல்பு.

நமது நாட்டுப்பழமை இப்பொழுது மேல் நாட்டில் பதுமையாக உருக்கொள்கிறது. பழமை புதுமையுருத் தாங்கல் இயல்பு. பழமைக்கும் புதுமைக்கும் பொருளில் வேற்றுமையில்லை;

தோற்றத்திலேயே வேற்றுமை புண்டு. பொருண் முதன்மைக்கு எப்பொழுதும் அழி வில்லை என்னும் நியாயம் ஈண்டுக்கருதற்பாலது. "முன் னைப் பழம் பொருட்கும் முன்னைப் பழம் பொருளே - பின்னைப் புதுமைக்கும் பேர்த்துமப் பெற்றியனே " என றார் வாதவூரடிகளும். நமது நாட்டுப்பழமை என்னும் உயிர் தற்கால மேல் நாட்டுப் புதுமை என்னும் உடல் தாங்கும் முறையில் தமிழ்மொழியில்

நூல் பல யாத்தல் காலத்துக்கியைந்த தொண்டாகும். அத்தகை நூல்களின் இன்றியமையா மையைச் சொல்லவும் வேண்டுமோ?

பெண் பெருமை பேசும் பன்னூல் இதுபோழ்து வெளிவரல் மிக அவசியம். நந்தமிழ் நாட்டில் பெண் ணைப்பற்றிய சில நூல்கள் வெளிவந்துலவுகின்றன. அவைகளுள் பெரும்பான்மையன இடைக்காலத்தில் தோன்றிய அடக்கு முறை நூல்களின் எதிரொலி களாக விளங்குகின்றன. சில நூல்கள் காமவெறி யூட் டக் கூடிய முறையில் எழுதப்பட்டிருக்கின்றன. இவை யல்லாத நூல்கள் எழுதிய அன்பர்கட்கு எனது வணக்கம் உரியதாக.

பழமையும் புதுமையும் விரவ, ஒல்லும்வகை முயன்று, "பெண்ணின் பெருமை அல்லது வாழ்க்கைத்துணை" என்னும் இந்நூல் எழு தலானேன். இந்நூல், பெண்மை தாய்மை இறைமை என்னும் முப்பொருளை முதலாக உடையது. இம்மூன்றும் முறையே நூலின் உடல் உள்ளம் உயிராக அமைந்திருக்கின்றன. இம்மூன்று முதலி னின்றுங் கிளம்பிய கவடுகளும் கோடுகளும் நூலின் பிற உறுப்புக்களென்க.

பெண் பிறவியின் விழுமிய நோக்கம், அன்பால் ஒரு வனை மணந்து, ஒழுங்குப்பட்ட இல்லறம் நடாத்துவதில் நிறைவேறுமென்பது நூலின் திரண்ட பொருள். இயற்கை வாழ்வினின்றும் வழுவிச் செயற்கைப்பாழில் விழுவதால் விளையுங் கேடுகள் இந்நூற்கண் விளக்கமாக இதப்பட்டிருக்கின்றன. அறம் அன்பு அருள் முதலிய வற்றிற்குப் பெண் உறையுள் என்பது இந்நூலில் தெளிவாக எடுத்துக் காட்டப்பட்டிருக்கிறது. ஒருத்தி ஒருவனுடனும் ஒருவன் ஒருத்தியுடனும் வாழும் உயரிய ஒழுக்க மணம் இந்நூலில் யாண்டுங் கமழ்ந்து கொண்டிருக்கும்.

இந்நூலின் உள்ளக்கிடக்கையை புணர விரும்புவோர் நூலை முற்றும் படித்துப் பார்ப்பாராக. ஆங்காங்கே சில பொருள் கண்டு நூலைப்பற்றி ஒருவித முடிந்த கருத் துக்கோடலாகாது. ஓரிடத்தில் ஓர் ஐயப்பொருள் காட்சி யளிக்கும். அவ்வைய நீக்கப் பொருள் மற்றோரிடத்தில் மிளிரும். ஆகவே நூலை முற்றும் வாசிக்குமாறு அன் பர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.


இயற்கைவாழ்வு, செயற்கைத் தாழ்வு, உடலோம்பல், மலச்சிக்கல், கூடா வொழுக்கத்தால் விளையுங் கேடுகள் போன்ற பொருள்கள் நூலின் ஊடே ஊடே சில விடங்களில் பெய்யப்பட்டிருக்கின்றன. அவை "கூறியது கூறும் " நோக்குடன் பெய்யப்பட்டனவல்ல என்பதை 14ம், அவை அநுவாதம் என்னும் நியாயம் பற்றிப் பெய்யப்

பட்டனவென்பதையந் தெரிவித்துக் கொள்கிறேன். ஒரு பொருள் ஒவ்வோரிடத்தில் ஒவ்வொரு குறிப் புடன் ஒவ்வொரு வித விளக்கம் முதலியன பெற்றிருத் தல் நூற்கண் காணலாம். ஒரே பொருள் இடத்துக் கேற்ற விளக்கமும், தெளிவும், முறையும், இயைபும், சுருக்கமும், பெருக்கமும் பெறும் வழியில் பல விடங்களில் பொறிக்கப்படல் ஒருவித நூன்மரபு. எல் லார்க்கும் பயன்படு முறையில் நூல் எளிய நடையில் எழுதப்பட்டிருக்கிறது.

பெண் பெருமை பெறின் நாடும் பெருமை பெறும் என்னுங் கருத்துக்கொண்டு சிறியேனால் எழுதப்பெற்ற இந்நூற்கண் குற்றங் குறைகளுளவேல், அவைகளை அறிஞர்கள் பொறுத்தருள்வார்களாக.

சென்னை, 25-6-27.) திரு. வி. கலியாண சுந்தரன்.

நினைவு அஞ்சல் தலை



திரு. வி. கலியாணசுந்தரனார் (திரு.வி.க) அவர்களின் நினைவாக, இந்திய அரசு நினைவு அஞ்சல் தலையை (Commemorative Postage Stamp) வெளியிட்டு கௌரவித்துள்ளது. "தமிழ்த் தென்றல்" என்று போற்றப்படும் திரு.வி.க, தமிழ் அறிஞர், கட்டுரையாளர் மற்றும் அரசியல் செயல்பாட்டாளர் ஆவார். இந்தப் புகழ்பெற்ற முத்திரையில் அவரது படம் இடம்பெற்று, தபால்தலை சேகரிப்பாளர்களாலும் (Philatelists) தமிழ் ஆர்வலர்களாலும் போற்றப்படுகிறது.

- **சிறப்பு:** திரு. வி. க அவர்களின் 125-வது பிறந்தநாளையொட்டி, இந்திய அஞ்சல் துறை அவர் மீது சிறப்பான அஞ்சல் தலைகளை வெளியிட்டிருக்கலாம்.
- **படைப்புகள்:** அவர் *தேசபக்தன்* பத்திரிகையின் ஆசிரியராகப் பணியாற்றினார்.

- **பங்களிப்பு:** சமூக சீர்திருத்தம், தொழிலாளர் நலன் மற்றும் தமிழ் இலக்கியத்திற்கு அவர் பெரும் பங்களிப்பு ஆற்றியுள்ளார்.

அவரது அஞ்சல் தலை, ஒரு சாதாரண அஞ்சல் முத்திரையாக இல்லாமல், அவரது தியாகத்தையும் தமிழ் தொண்டையும் போற்றும் அடையாளமாக விளங்குகிறது.

Vi. Kalyanasundaranar

https://istampgallery.com/vi-kalyanasundaram/

A commemorative postage stamp on Thiru. V. Kalyanasundaram (Thiru Vi. Ka.), a Tamil scholar, essayist and activist**:**

Issued by **India**
Issued on **Oct 21, 2005**

Issued for **:** The Department of Posts honours the life and works of Vi. Kalyanasundaranar through the issue of a commemorative postage stamp.

Credits :
Stamp & FDC **:** Sankha Samanta
Cancellation **:** Alka Sharma

Type : Stamp, **Mint** Condition

Colour : Multicolour

Denomination : 500 Paisa

Stamps Printed : 0.6 Million

Printing Process : Photogravure

Printer : India Security Press, Nashik

Name : Thiruvarur Virudhachala Kalyanasundaram Mudaliar

Born on **Aug 26, 1883** at **Thullam, Chengalpet** district**, Tamil Nadu, India**

Died on **Sep 17, 1953** at **Royapettah, Chennai, Tamil Nadu, India**

About :

- Vi. Kalyanasundaranar, popularly known as Thiru Vi. Ka. was one of the prominent figures in Indian political life. He was an eminent scholar in Tamil, a prolific writer, a fiery speaker, a trade union leader, and a freedom fighter as well.
- He was born on 26th August 1883 to Virudhachala Mudaliar and Chinnammal. After completing his education in Wesley High School, Royapettah, he joined as a teacher in the same school. He worked in several companies run by the English, but inspired by the ideals of Bal Gangadhar Tilak and the prevailing nationalist

sentiments, he gave up his job and joined the freedom struggle. For this he was put under house arrest.

- In 1918, Vi. Kalyanasundaranar was closely associated with Mahatma Gandhi. Whenever Gandhiji came to Chennai and addressed public meetings, Vi. Kalyanasundaranar translated his speeches in Tamil language.
- He started a labour union in 1918 in Chennai. He organized a confederation of labour unions in 1920.
- He started a newspaper 'Desa Bakthan' but it was banned by the British. Then he started another newspaper 'Nava Sakthi' and worked for the growth of Tamil language and for propagating nationalist ideals.
- A great scholar, Vi. Kalyanasundaranar authored more than fifty books, the most popular being 'The Greatness of Women' in which he spread the ideals of national freedom, the growth of Tamil language and literature, and social reforms, particularly emancipation of women in all walks of life.
- His career was marked by his nationalism, spiritual discipline, courage and compassion. He passed away on 17th September 1953, but his legacy lives on.
- Text : Material given by the proponents.

Commemorative Stamp Set: Vi. Kalyanasundaranar (1883-1953)

https://thephilatelist.in/stamps/vi-kalyanasundaranar-1883-1953/

Design Elements

- Central Imagery: The stamp features a dignified portrait of Vi. Kalyanasundaranar, also known as "Thiru Vi. Ka.," the celebrated Tamil scholar, writer, and freedom fighter. He is depicted wearing traditional Tamil attire, with a focused expression that reflects his dedication to Tamil language, social reform, and the Indian independence movement. The background includes subtle imagery, such as open books and symbols of the Tamil Renaissance, to highlight his literary and reformist contributions.
- Color Scheme: Deep hues of green, maroon, and gold convey both his intellectual authority and his cultural impact. Gold accents emphasize his revered position in Tamil society, while earthy tones provide a connection to his commitment to social causes.
- Text and Inscriptions: The stamp includes the inscription "Vi. Kalyanasundaranar, 1883-1953," with a special emphasis on his honorific "Thiru Vi. Ka." in Tamil. Below his name, a line like "Scholar, Reformer, Freedom Fighter" reflects his multi-faceted legacy.

Cultural and Historical Significance

- Vi. Kalyanasundaranar, affectionately known as Thiru Vi. Ka., was an influential Tamil scholar, writer, social reformer, and freedom fighter. He played a key role in the Tamil Renaissance, a movement that sought to revive and promote Tamil culture, language, and identity. His literary works, which included essays, poems, and speeches, often emphasized themes of social justice, equality, and nationalism.
- As an advocate for the Tamil language, Thiru Vi. Ka. worked tirelessly to elevate Tamil literature and inspire pride among Tamil speakers. He also supported social reforms, particularly those aimed at uplifting the

marginalized, and was deeply involved in India's independence movement. His writings championed self-respect, Tamil identity, and national freedom, making him a revered figure in Tamil Nadu.

Usage

- **Postage:** This commemorative stamp can be used for regular postage, allowing people across India to honor Thiru Vi. Ka.'s contributions.
- **Educational and Cultural Promotion**: This stamp can be used by Tamil cultural organizations, museums, and educational institutions to promote awareness of his impact on Tamil literature and the independence movement.
- **Philatelic Collections**: This stamp is ideal for collectors interested in Indian literary figures, the Tamil Renaissance, and freedom fighters.

Importance of the Commemorative Stamp Set

- **The stamp set commemorates the contributions of Vi. Kalyanasundaranar, a towering figure in Tamil literature and the freedom struggle. His role in the Tamil Renaissance and his advocacy for social reform made a lasting impact on Tamil Nadu's culture and society. By celebrating him on a commemorative stamp, his influence and legacy are honored, inspiring future generations to value both social justice and cultural pride.**

Example of the Stamp Design

- **Primary Stamp**: The stamp depicts Thiru Vi. Ka. with a focused expression, dressed in traditional attire. The background might feature motifs of Tamil literature or symbols associated with social justice. The title "Thiru Vi. Ka." is prominently displayed alongside the inscription "Vi. Kalyanasundaranar, 1883-1953."

The Commemorative Stamp Set Might Include:

- **First Day Cover**: An envelope featuring illustrations inspired by Tamil literature and reformist imagery. The cancellation mark may feature his initials "Thiru Vi. Ka." in Tamil script.
- **Miniature Sheet**: A set of stamps with different images highlighting his contributions to Tamil literature, independence activism, and social reform.
- **Informative Brochure**: A booklet providing background on Vi. Kalyanasundaranar's life, his role in Tamil Renaissance, his impact on the independence movement, and select quotes or excerpts from his writings.

Significance

- **The commemorative stamp set for Vi. Kalyanasundaranar, or Thiru Vi. Ka., celebrates a respected leader of the Tamil Renaissance and an influential figure in India's freedom struggle. His dedication to Tamil literature, social justice, and national pride made a profound impact, and his legacy continues to inspire. This stamp set is a tribute to his lasting contributions to Tamil Nadu's culture, literature, and history.**

காலக்கோடு

திரு.வி.கலியாணசுந்தரனார் (திரு.வி.க - 1883-1953) தமிழ்நாட்டின் சிறந்த அறிஞர், பத்திரிக்கையாளர் மற்றும் தொழிற்சங்க முன்னோடி. 'தமிழ்த்தென்றல்' எனப் போற்றப்படும் இவர், 1919-ல் 'தேசபக்தாமிர்தம்' போன்ற நூல்களை எழுதி, 1920-

களில் விடுதலை இயக்கத்தில் தீவிரமாகப் பணியாற்றி, அரசியல், சமயம், மற்றும் சமூக சீர்திருத்தம் சார்ந்த பல நூல்களைப் படைத்தார்.

திரு.வி.க வாழ்க்கைக் காலக்கோடு (Timeline):

- **ஆகஸ்ட் 26, 1883:** செங்கல்பட்டு மாவட்டம் துள்ளம் (Thullam) கிராமத்தில் பிறப்பு.
- **1883-1900-களின் முற்பகுதி:** கல்வி மற்றும் தமிழ்க் கற்பித்தல்.
- **1917:** சென்னை இராயப்பேட்டை வெஸ்லி பள்ளியில் தமிழாசிரியராகப் பணி.
- **1919:** 'தேசபக்தாமிர்தம்' நூல் வெளியீடு. அரசியலில் ஈடுபாடு.
- **1920:** 'நவசக்தி' இதழின் ஆசிரியராகப் பொறுப்பேற்பு.
- **1921:** 'என் கடன் பணி செய்து கிடப்பதே' நூல் வெளியீடு. தொழிற்சங்கப் பணிகள் (பின்ஸ்பெரி மில்).
- **1924:** 'தமிழ்நாட்டுச் செல்வம்' நூல் வெளியீடு.
- **1928:** 'தமிழ்த்தென்றல்' (தலைமைப்பொழிவு) நூல் வெளியீடு. சிறந்த மேடைப் பேச்சாளர் எனப் பெயர் பெறுதல்.
- **1930:** 'சீர்திருத்தம்' (இளமை விருந்து) வெளியீடு.
- **1935:** 'தமிழ்ச் சோலை' கட்டுரைத் திரட்டு வெளியீடு.
- **1940:** 'இந்தியாவும் விடுதலையும்' நூல் வெளியீடு.
- **செப்டம்பர் 17, 1953:** காலமானார்.

முக்கியப் பங்களிப்புகள்:

- தமிழ் மறுமலர்ச்சியின் முன்னோடி.
- தொழிற்சங்கத் தலைவராக தொழிலாளர்களின் உரிமைக்காகப் பாடுபட்டார்.
- சைவ சமயத்தின் மீது பற்று, இலக்கிய மற்றும் சமூக சீர்திருத்தக் கட்டுரைகளை எழுதினார்.







காணொளிகள்

01] Thiru Vi Ka by Aru Thirumurugan

https://www.youtube.com/watch?v=f0xPXnHaIZg [1:04:13]

This video shows the speech by Aru Thirumurugan in Sydney on Tamiltenral Thiru Vi Ka at a meeting to recognize Swami Vipulanadar and Thiru Vi Ka. The meeting was organized by the World Saiva Council (Australia) on 26th April 2015 at the Sydney Durgai Amman Tamils Hall.

02] திரு.வி.க. பேச்சு பயிலரங்கம்

https://www.youtube.com/watch?v=pf6loIF-t4U [33:45]

03] Thiru Vi Kavin Adi Chuvatil - Talk on Thiru Vi Ka by Munaivar Pa Mahalingam

https://www.youtube.com/watch?v=CHhEF1a7ce4 [13:58]

04] திரு.வி.க வரலாறு : திருவிக

https://www.youtube.com/watch?v=dRwhR59JF88 [5:11]

05] #திரு.வி.க. #முக்கிய குறிப்புகள்

https://www.youtube.com/watch?v=vwi-GL1udmA [5:56]

06] திரு வி க | Thiru vi ka

https://www.youtube.com/watch?v=bfgl0LdUsIE [5:04]

07] பழைய புத்தகம்/திரு.வி.க பற்றிய முழுமையான தகவல்கள்

https://www.youtube.com/watch?v=tT-t3HhA7_c [9:41]

08] Thiru Vi Ka Poonga | Tamil Full Movie

https://www.youtube.com/watch?v=2vkTEDdR8YE [1:54:47]

09] திரு வி க | பகுதி -1 | வாழ்க்கை வரலாறு & முக்கிய வரிகள்

https://www.youtube.com/watch?v=ZXV6lTPdkGE [25:11]

10] Talk on Thiru Vi Kalyanasundaranar by Munaivar JR Latchumi

https://www.youtube.com/watch?v=AaLLRAJows8 [12:59]

(😊)(😊)(😊)(😊)(😊)

காலக்கோடு

"திரு.வி.கா" என்று அறியப்பட்ட திரு.வி. கல்யாணசுந்தரம் (1883–1953), நவீன தமிழ் உரைநடையை வடிவமைத்த ஒரு முன்னோடித் தமிழ் அறிஞர், கட்டுரையாளர், தொழிற்சங்கத் தலைவர் மற்றும் செயற்பாட்டாளர் ஆவார். அவர் இந்திய சுதந்திரப் போராட்டக் காலத்தில் ஆசிரியராகவும் , '*தேசபக்தன்*'பத்திரிகையின் பதிப்பாசிரியராகவும் பணியாற்றினார் ; தொழிற்சங்கங்களை ஒழுங்கமைத்தார்; மேலும் சமூக சீர்திருத்தத்திற்காகவும் தமிழ் தேசியவாதத்திற்காகவும் குரல் கொடுத்தார்.

திரு. வி. கா. வின் முக்கிய மைல்கற்கள்:

- **ஆகஸ்ட் 26, 1883:** சென்னைக்கு அருகிலுள்ள துள்ளம் (தற்போது தண்டலம்) கிராமத்தில் விருத்தாசல முதலியார் மற்றும் சின்னம்மாள் ஆகியோருக்குப் பிறந்தார்.
- **ஆரம்பகால வாழ்க்கை மற்றும் கல்வி:** யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த மறைமலை அடிகள் மற்றும் என். கதிரவேல் பிள்ளை உள்ளிட்ட அறிஞர்களிடம் கல்வி பயின்றார்.
- **ஆரம்பகாலப் பணி:** வெஸ்லி கல்லூரி உயர்நிலைப் பள்ளியில் ஆசிரியராகப் பணியாற்றினார்.
- **1917:** தேசியவாதத் தமிழ் நாளிதழான *தேசபக்தனில்* தலையங்க உதவியாளராகச் சேர்ந்தார் .
- **1918:** தென்னிந்தியாவின் முதல் தொழிற்சங்கங்களை அமைப்பதற்காக பி.பி. வாடியாவுடன் இணைந்து, ஒரு முக்கிய தொழிலாளர் தலைவரானார்.
- **1920கள்-1930கள்:** ஏராளமான இலக்கியப் படைப்புகளை வெளியிட்டதோடு, தனித்துவமான, எளிய நவீன தமிழ் உரைநடைப் பாணியையும் வளர்த்துக் கொண்டார்.
- **1920கள்:** நவசக்தி *என்ற தமிழ் இதழைத் திருத்தினார்* .
- **செப்டம்பர் 17, 1953:** காலமானார்.

முக்கிய பங்களிப்புகள்:

- **இலக்கியம்:** மாணிக்கக்கொடி, தமிழ்தென்றல் *போன்ற கட்டுரைகள், நூல்கள்* மற்றும் சமய நூல்களுக்கான உரைகளுக்காக அறியப்படுகிறார்.
- **அரசியல்:** இந்திய சுதந்திரப் போராட்டத்தில் தீவிரமாகப் பங்கேற்றார்.
- **தொழிலாளர்:** தமிழ்நாட்டில் தொழிலாளர் உரிமைகளுக்காகப் போராடினார்.

அவரது நூற்றாண்டு விழாக் கொண்டாட்டங்களின் விளைவாக, அவரைக் கௌரவிக்கும் விதமாக திரு. வி. கா. அரசு கலைக் கல்லூரிக்குஅவரது பெயர் சூட்டப்பட்டது .

(😊)(😊)(😊) திருவிக(😊)(😊)(😊)